Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 01, 2024

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 01, 2024 | ஒளி: 10 கதிர்: 062 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ FREE



## விலைகள் குறைப்பு

மாதாந்தம் மேற்கொள்ளப்படும் விலை சூத்திரத்தின் பிரகாரம், எரிபொருட்களின் விலைகள், திங்கட்கிழமை (30) இரவு முதல் குறைக்கப்பட்டன. இது தொடர்பில் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில், முதன்முறையாக கூடிய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது. இதில், பிரதமர் அருணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். புதிய ஜனாதிபதியின் கீழ், மூவரடங்கிய அமைச்சரவையே உள்ளது.

### அழைப்பை ஏற்காவிடின்

# “தனி வழி”

- நியமன பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால் அவர்களும் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்தவேண்டும்
- தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் மேற்கொண்டுள்ளோம்



■ எஸ்.ஆர்.லெம்பேட்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் தமிழரசு கட்சியின் பெயரில் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு அழைப்பு விடுத்திருந்தோம் .அழைப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டால் தனித்துத் தேர்தலை எதிர் கொள்வோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் திங்கட்கிழமை (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

“நாங்கள், அண்மையில் எமது தமிழரசு கட்சியின் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் அனைவரையும் கட்சிக்கு வருமாறு அழைப்பதாகவும் இலங்கை தமிழரசு கட்சியின் பெயரிலும் தமிழரசு கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அழைப்பு விடுப்பதாகத் தீர்மானித்து இருந்தோம். அப்படி அவர்கள் வராவிட்டால் இலங்கை தமிழரசு கட்சி ஆகிய நாங்கள் தனித்துப் போட்டியிடுவதாகவும் ஏற்கெனவே தீர்மானம் எடுத்திருந்தோம்” என்றார்.

தொடர்ச்சி P2




### ஜனாதிபதியின் தீர்மானத்தை

## இடைநிறுத்தியது தேர்தல் ஆணைக்குழு

விவசாயிகளுக்கு 25,000 ரூபா உர மானியமும், மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்காக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எடுத்த தீர்மானத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான மானியத்தை வழங்கத் தீர்மானித்ததன் மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்திற்கொண்டு, குறித்த மானியம் வழங்கும் ஜனாதிபதியின் தீர்மானத்தை இடைநிறுத்துவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.

தொடர்ச்சி P2

## அச்சிடும் பணிகள் நிறைவு

பாராளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரசாங்க அச்சகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மொத்தம் 10 இலட்சம் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகப; கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் ஒரு பகுதி ஞாயிற்றுக்கிழமை (29) தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், மீதமுள்ளவை திங்கட்கிழமை(30)

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக வாக்குச் சீட்டுகள் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உட்பட பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அனைத்து அச்சிடும் நடவடிக்கைகளும் நிறைவடையும் எனவும் தெரிவித்துள்ளார்.

## ரணில் தலைமையில் புதிய கூட்டணி

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த சகலருடனும் இணைந்து பரந்த கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.



தொடர்ச்சி P2

### பொருளாதார முன்னேற்றத்தின் பங்காளர்களாக

## “இளைஞர்கள் மாற வேண்டும்”

தேர்தலொன்று முடிந்தாலும் நாட்டின் பிரச்சினைகள் தீரவில்லை. நாட்டு மக்கள் அழுத்தங்களோடு வசதியற்ற வாழ்க்கையை நாளும் பொழுதுமாகக் கழித்து வருகின்றனர். சிறு பிள்ளைகள், தாய்மார்கள், பிள்ளைகள், இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள், ஓய்வூதியம் பெறுவோர் என அனைவரும் பொருளாதார அழுத்தத்தில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை



வழங்குபவர்களாக ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். வீழ்ச்சி கண்டு போயுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

தொடர்ச்சி P2

## விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்சவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்த மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சையத் அல்ஹுசைன் இலங்கைக்கு விஜயம் செய்த போது, கொழும்பு தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு முன்பாக தடுத்தார் என குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, வீரகுமார திசாநாயக்க, மொஹமட் முஸம்மில், ரோஜர் செனவிரத்ன உள்ளிட்டோருக்கு எதிராக குருந்துவத்தை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.



தொடர்ச்சி P2

## நுவரெலியாவில் துப்பாக்கிச் சூடு : ஒருவருக்கு காயம்: நால்வர் கைது

■ செ.திவாகரன், ஆ.ரமேஸ்

வலப்பனை, மந்தாரம் நுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எலமலை வனப்பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டவர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மந்தாரம் நுவர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், திங்கட்கிழமை(30) காலை திடீர் சுற்றிவளைப்பை பொலிஸார் மேற்கொண்டனர்.

அதன்போது, சந்தேக நபர்கள் தப்பிச்செல்ல முயற்றுள்ளனர். இதனையடுத்தே, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் ஒருவர் காயமடைந்தார். தப்பிச் சென்ற நால்வரையும் பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஐ.தே.கவுடனான பேச்சு தோல்வி

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காகப் பரந்துபட்ட கூட்டணியை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை என சமகி ஜன பலவேகயவின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க வெளியேறி பொதுத் தேர்தல் தொடர்பாகக் கட்சியின் ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடலாம் என தெரிவித்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து நல்ல பதில் கிடைக்கவில்லை எனவும் பொதுச் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் இருப்பதால், அவர்களுடன் கூட்டணி வைப்பது பிரச்சினையாகி விட்டது என்றும் அவர் கூறினார்.



தொடர்ச்சி P2

## இன்று இலவசம்

சர்வதேச சிறுவர் தினமான இன்று (01) செவ்வாய்க்கிழமை 12 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் தெஹிவளை மிருகக்காட்சிசாலையை இலவசமாகப் பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை வளாகத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## வரி செலுத்தாதவர்களுக்கு விஷேட அறிவிப்பு


2023/2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி செலுத்த வேண்டிய ஒவ்வொரு நபரும் வரியையும் இன்றைக்குள் (30) செலுத்த வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவரேனும் வரியைச் செலுத்தத் தவறினால் அல்லது தாமதப்படுத்தினால், அவர் சட்டத்தின்படி அபராதம் மற்றும் வட்டி விதிப்புக்கு உட்படுத்தப்படுவார் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், எந்தவொரு நபரும் செலுத்த வேண்டிய வரிகள் நிலுவையிலிருந்தால், அவை அனைத்தும் அக்டோபர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தப்பட வேண்டும்.

அன்றைய திகதிக்குப் பின்னரும் செலுத்தப்படாத வரிகள் இருப்பின் அவற்றை மீளப்பெறுவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1944 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



**PAGE 1 தொடர்ச்சிகள்**

# "தனி வழி"

ஆகவே, நியமன பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால் அவர்களும் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப் படுத்துவதனால் வெகு விரைவில் அன்று நாங்கள் நியமித்த நியமன குழு கூடி அவர்கள் இணங்கி வரவில்லை என்றால் அவற்றை கருத்தில் எடுத்து தமிழரசு கட்சியின் வேட்பாளர்களை நாங்கள் தீர்மானிப்போம் என தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள், யுவதிகள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதுடன் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி உற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் மேற்கொண்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.




## இடைநிறுத்தியது தேர்தல் ஆணைக்குழு

ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொதுத் தேர்தலின் பின்னர் குறித்த மானியம் வழங்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது

## ரணில் தலைமையில் புதிய கூட்டணி



புதிய கூட்டணிக்கு ரணில் விக்கிரமசிங்க, தலைமை தாங்கினாலும், பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும், தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வரமாட்டார் என்றும் அவர் ஏற்கெனவே அறிவித்துள்ளார் என மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார்.

## "இளைஞர்கள் மாற வேண்டும்"



எதிர்வரும் தேர்தலின் ஊடாக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வட கொழும்பு தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வட கொழும்பு கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வட கொழும்பு தேர்தல் தொகுதி பிரதான அமைப்பாளர் வை.சி.பீ.ராம் ஏற்பாடு செய்திருந்த இச்சந்திப்பில் வட கொழும்பு தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் இளைஞர்கள் பங்காளர்களாக மாற வேண்டும். பதில்கள் என்பது வெறும் விமர்சனங்களாக மாத்திரம் இருந்து விடக் கூடாது. தீர்வுகளைத் தேடும் விடயத்தில் இங்கு இளைஞர்களை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தலைமைத்துவம் வழங்குபவர்களாக மாற வேண்டும். நாட்டின் பிரச்சினைகளை தனி நபர்களாலோ அல்லது குழுக்களாலோ தீர்க்க முடியாது என்பதால் போட்டி, எதிர்ப்பு என்ற அரசியல் கலாசாரத்தை மறந்து மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

> **ஜனாதிபதி தேர்தலில் தோற்றாலும் கபட நாடகம் ஆடமாட்டோம். 220 இலட்சம் மக்களின் வாழ்வு பலப்படுத்தப்பட வேண்டும். நாட்டையும் மக்களையும் நோக்கிய சிறந்த பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்க தயார்**

ஜனாதிபதி தேர்தலில் தோற்றாலும் கபட நாடகம் ஆடமாட்டோம். வெளிநாட்டு முதலீடுகள் நமது நாட்டுக்குத் தேவை. அன்னிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் சூழலை இங்கு உருவாக்க வேண்டும். நாடாக இதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து தருவோம். நாட்டின் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தித் தொழில்கள் வலுப்பெற வேண்டும். இதற்கு தயாராக உள்ள அனைத்து வர்த்தகர்களும் புதிய தொழில்களை நம்பிக்கையோடு ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், வறுமை அதிகரித்துள்ளதால், இந்த வறுமையை ஒழிக்க வேண்டும். ஏழ்மை அதிகரித்துள்ளால், இந்த ஏழ்மையைப் போக்கத் தேவையான ஏற்பாடுகளுக்கான ஒத்துழைப்புகளை வழங்குவோம். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% பங்களிக்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் மீண்டும் வலுப் பெற வேண்டும். புதிய தொழில் முயற்சியாண்மைகளை உருவாக்க முயற்சி எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவும், ஒற்றுமையின்மையை உருவாக்கவும், நாட்டில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கவும், ஸ்திரமின்மை மூலம் அதிகாரத்தை கைப்பற்றவும் முயற்சிக்க மாட்டோம். இவற்றை விட நாடு முக்கியமானது. 220 இலட்சம் மக்களின் வாழ்வு பலப்படுத்தப்பட வேண்டும். நாட்டையும் மக்களையும் நோக்கிய சிறந்த பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்க தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.கவுடனான பேச்சு தோல்வி

இதன் காரணமாக நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுவார்த்தையை தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவருக்கும் எதிர்வரும் தேர்தலுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களைத் தயாரிக்கும் என்றும் அவர் கூறினார்.



## விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சியங்களின் விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி நடத்த கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு திங்கட்கிழமை (30) கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நுவரெலியாவில் துப்பாக்கிச் சூடு : ஒருவருக்கு காயம்: நால்வர் கைது




கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 40 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் இதில், தற்காலிகமாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும் உள்ளடங்குகின்றார் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயடைந்தவர் (41) வயதுடையவர் எனவும் இவர் ரிகில்கஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி- போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர் .

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மந்தாரம் நுவர பொலிஸார், நுவரெலியா தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

## இன்று இலவசம்

"சிறுவர்களின் கல்வி அறிவை மேம்படுத்துதல்", "இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த மனப்பான்மையை மேம்படுத்துதல்", "குழந்தைகளின் திறன்களை மேம்படுத்துதல்", "பொழுதுபோக்கை வழங்குதல்" போன்ற பல நோக்கங்களின் அடிப்படையில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



## கத்தார் கார் விபத்தில் பலி



■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் நகரை சேர்ந்த முஹம்மது முபாரிஸ் மற்றும் அவரது குடும்பம், கத்தாரிலிருந்து உம்ராவிற்கு சென்று திரும்பும் வழியில் இடம்பெற்ற, கார் விபத்தில் முபாரிஸின் கர்ப்பிணி மனைவியான பாத்திமா ஷபாரிஜ் (33) உயிரிழந்துள்ளார்.

சவூதி- கத்தார் எல்லையான சல்வா பகுதியில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கர்ப்பிணி தாயும் வயிற்றில் இருந்த சிசுவும் மரணமடைந்தனர். ஏனையவர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாகனம் ஓட்டும் போது சாரதி தூங்கியதாலே இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த கர்ப்பிணி தாயின் உடல் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு கத்தாரில் ஞாயிற்றுக்கிழமை (29) நல்லடக்கம் செய்யப்பட்டது.

## விண்ணப்பம் தாக்கல் திகதி நீடிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் ஒக்டோபர் 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுத் தேர்தல்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தை கடந்த 24ஆம் திகதி நள்ளிரவு கலைத்து ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டது.

அதன்படி, வேட்புமனு தாக்கல் ஒக்டோபர் 4 முதல் 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை நடைபெறும், அதே நேரத்தில் புதிய பாராளுமன்றம் நவம்பர் 21, 2024 அன்று கூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சூடு வைத்த தாய்க்கு விளக்கமறியல்

முன்பள்ளிக்கு செல்ல மறுத்த 5 வயது மகளின் உடலில் சூடு வைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளம் தாயை ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மேலதிக நீதவான் வாசனா நவரத்ன உத்தரவிட்டுள்ளார்.

கண்டி, நாகஸ்தென்ன பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய இளம் தாயொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளம் தாயின் 5 வயதுடைய மகள் முன்பள்ளிக்கு செல்வதற்கு மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் கோபமடைந்த தாய் , மகளின் உடலில் பல இடங்களில் பலமாக சூடுவைத்துள்ளார்.

சந்தேக நபரான தாய் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

## மோசடி செய்த பெண் கைது

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் பெண் ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


சந்தேக நபரான பெண் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்தி வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான பெண் தென் கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மூன்று நபர்களிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பணமும் இத்தாலியில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக நபரொருவரிடமிருந்து

> **வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றை நடத்தி வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது**

7 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பணமும் பெற்று மோசடி செய்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



# கடல் மட்டம் உயரும்

2050ஆம் ஆண்டளவில் இலங்கையின் கடல் மட்டம் 0.2 முதல் 0.6 மீற்றர் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், கரையோர சமூகங்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடல் மட்ட உயர்வினால் ஏற்படும் இருத்தலியல் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கான உயர்மட்டக் கூட்டம் கடந்த புதன் கிழமை ஐ.நா. பொதுச் சபையில் இடம்பெற்றிருந்தது.

இதில் கலந்துகொண்டு பேசிய ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ், வரவிருக்கும் நெருக்கடி குறித்து கடுமையான எச்சரிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள நாடுகள் நடவடிக்கை எடுப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தின.

"எங்கள் உலகம் ஆபத்தான நீரில் உள்ளது" என்று குட்டெரஸ் தெரிவித்திருந்தார். "கடந்த 3,000 ஆண்டுகளில் இல்லாத வகையில், உலகளாவிய கடல் மட்டம் இப்போது வேகமாக உயர்ந்து வருகிறது.

ஏனெனில், பசுமை இல்ல வாயுக்கள் நமது கிரகத்தை வெப்பமாக்குகின்றன, இது கடல் நீரை விரிவுபடுத்துவதுடன், பனிக்கட்டிகளும் வேகமாக உருகுகின்றன. "கடல் மட்ட உயர்வு என்பது துயரத்தின் எழுச்சி அலை என்று பொருள்படும்" என அன்டோனியோ குட்டெரஸ் மேம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஐ.பி.சி.சி. (Intergovernmental Panel on Climate Change) மதிப்பீட்டின்படி, 2050ஆம் ஆண்டில், உலக கடல் மட்டம் சராசரியாக 15 முதல் 30 சென்டி மீட்டர் வரை உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

















## மீண்டும் பாடசாலைக்கு செல்வோம்

நுவரெலியா கல்வி வலயம் கோட்டம் இரண்டுக்கு உட்பட்ட நாகசேனை நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கற்றோர் பேரவையின் ஏற்பாட்டில் "மீண்டும் பாடசாலைக்கு செல்வோம்" நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றது.

கற்றோர் பேரவையின் தலைவர் பி.தியாகராஜா தலைமையில் வித்தியாலய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு, வித்தியாலய அதிபர் என்.சிவலிங்கம் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில், கலந்து சிறப்பித்த அனைத்து பழைய மாணவர்களும் சிறுவயதில் எவ்வாறு இந்த வித்தியாலயத்திற்கு சமூகமளித்திருந்தனர் அதை போன்று இந்த நிகழ்வில் புத்தகப்பையுடன் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், கற்றல் பேரவையின் நிதியினூடாக அமைக்கப்பட்டிருந்த 'ஸ்மார்ட்' வகுப்பறையும் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன்,

பழைய மாணவர்களின் விளையாட்டு நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வை அலங்கரித்தன.

இந்நிகழ்வில், கற்றோர் பேரவையின், தலைவர் தியாகராஜ், செயலாளர் எஸ்.கௌசல்யா, பொருளாளர் எஸ்.எலெக்சாண்டர் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் பிரதேசத்தில் உள்ள அதிபர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.









## புதையல் தோண்டிய ஐவருக்கு விளக்கமறியல்

**சந்தேகநபர்களிடம் இருந்து பூஜை பொருட்கள், மண்வெட்டி, அலவாங்கு உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்**

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதி பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் வெள்ளிக்கிழமை(27) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.


பாண்டிருப்பு-திருவள்ளுவர் வீதி, மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 தொடக்கம் 30 வயது மதிக்கத்தக்கவர்கள் நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

வீடொன்றில் புதையல் தோண்டுவதாக பெரியநீலாவணை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமையவே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது, கைது செய்யப்பட ஐவரையும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல்.நதீர் முன்னிலையில் முன்னிறுத்திய வேளை, சந்தேக நபர்களை எதிர்வரும் திங்கட்கிழமை(30) வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பூஜை பொருட்கள், மண்வெட்டி, அலவாங்கு உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## விழுந்த மாணவன் பலி

ரீ.எல்.ஜவ்பர்கான்



காத்தான்குடியில் பாடசாலை மாணவன், தான் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்து மரணமாக சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (29) மாலை இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியை மார்க்கட் வீதியில் வசித்து வரும் ஜமால்தீன் முஹம்மது ரிஹாம் என்ற 16 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

தனது இல்லத்திற்கு முன்னால் உள்ள சிறிய வீதி ஒன்றில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் திடீரென சறுக்கி கீழே விழுந்ததால் நெஞ்சு பகுதியில் பாரிய அளவிலான தாக்கத்துக்கு உள்ளாகி மேற்படி மரணம் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி அல்ஹிறா மகா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி பயிலும் குறித்த மாணவன் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளைய முதல்வர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஐவருடன் மீனவ படகு மாயம்

இலங்கை மீனவர்கள் 5 பேருடன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற படகொன்று சர்வதேச கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகியிருப்பதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த 5 இலங்கை மீனவர்களும் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 'ரன்முத்து துவ 10' எனும் மீன்பிடிப் படகில் கடந்த 12ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றதாகவும் அந்த படகு கடந்த 26ஆம் திகதி விபத்துக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான படகு தற்போது இந்திய கடற்பரப்பில் மிதந்து கொண்டு இருப்பதாகப் படகின் உரிமையாளருக்கு மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான படகில் இருக்கும் மீனவர்களுக்கு உதவுவதற்காக மற்றுமொரு படகை அனுப்பியுள்ளதாகப் படகின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## 3 சுயேச்சைக்குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பாராளுமன்ற தேர்தலுக்காகப் போட்டியிடுவதற்காக 3 சுயேச்சைகுழுக்கள் திங்கட்கிழமை (30) மட்டு. தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன.

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணங்களை செலுத்தும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது. இதற்கமைய மட்டு. தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகன் தலைமையில் சுயேச்சை குழுவில் 8 பேர் போட்டியிடுவதற்காக முதல் முதலாக கட்டுப்பணத்தை தேர்தல் திணைக்களத்தில் செலுத்தியுள்ளார். மட்டக்களப்பில் ஓய்வு பெற்ற அரச ஊழியரான கனகசூரியம் சோமாஸ்கந்தமூர்த்தி தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

## மதுபானசாலைக்கு எதிராக சவப்பெட்டி ஆர்ப்பாட்டம்






எஸ்.ஆர்.லெம்பெட்

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலையை உடனடியாக இட மாற்றக் கோரி பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி மதுபானசாலைக்கு முன்பாக திங்கட்கிழமை(30) அன்று சவப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டதுடன், அரச அதிபரின் வாக்குறுதிக்கமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை இடைநடுவில் கை விட்டுச் சென்றனர்.

# குழந்தைகள், முதியோர் தினம் மற்றொரு நாள் அல்ல

இன்னும் ஓர் உலக குழந்தைகள் தினமும் முதியோர் தினமும் வந்துவிட்டது. சில தனிநபர்களும் அமைப்புகளும் அதற்காக பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளன. இந்த திட்டங்களில் பல குழந்தைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டவை.

குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட நாளில், அவர்களை மகிழ்விப்பதும், சுதந்திரமாக மகிழ்வதற்கான வாய்ப்பை வழங்குவதும் அவசியம். ஆனால், இன்றைய குழந்தைகள் இப்படி மகிழ்ச்சியாக இருக்க இப்படி ஒரு நாள் மட்டும் போதுமா?

இப்போதெல்லாம், நம் நாட்டுக் குழந்தைகள் இடைவிடாத கல்விப் போட்டியின் நடுவில் உள்ளனர். நல்ல பாடசாலையைத் தெரிவு செய்வதற்கும், நல்ல வேலைக்கு விண்ணப்பிக்கத் தேவையான அறிவைப் பெறுவதற்கும் இந்தப் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய அவசியம்.

சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பாடசாலைக்குச் செல்லுங்கள். அங்கிருந்து கூடுதல் வகுப்புகளுக்குச் செல்லும் சிறுவர்கள் புத்தகத்தின் மூலம் அறிவைப் பெறுகிறார்கள், ஆனால் விளையாட்டில் ஈடுபடவும், சில நிமிடங்கள் தங்கள் சக நண்பர்களுடன் சுதந்திரமாக அரட்டையடிக்கவும் சிலருக்கு நேரம் இல்லை.

பெரியவர்களாகிய நாம், நம் குழந்தைப் பருவத்தைப் பற்றி அடிக்கடி பேசுகிறோம்.

அந்த சிறுவயது குறும்புச் செயல்களின் அழகை மீண்டும் மீண்டும் பிரதிபலிப்போம். ஆனால் நாம் முன்பு பெற்ற அனுபவங்களைப் பெறுவதற்கு நம் குழந்தைகளுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க நினைத்திருக்கிறோமா?

கல்வியில் எவ்வளவுதான் உயர்ந்தாலும் மனிதாபிமானம், அன்பு, கருணை இல்லாத சுயநலவாதிகள் இருந்தால் அது சமுதாயத்திற்கு எந்த நன்மையும் செய்யாது.

தற்காலத்தில் தாயைப் பெற்றெடுத்த தாயையும், அவர்களை வாழவைத்து இந்த உலகத்தைப் பெற்றெடுத்த தந்தையையும் சொல்ல முடியாத செய்திகளை நாம் அடிக்கடி கேள்விப்பட்டுப் பார்ப்பது இதை உறுதிப்படுத்துகிறது. எனவே, பெரியவர்களாகிய நாம் முதலில் நம் வயதான பெற்றோரை நம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாகக் கருத வேண்டும்.

எதிர்காலத்தில் ஒரு நாள் நீங்கள் வயதாகும்போது, குழந்தைகள் உங்களைத் தனியாக விட்டுவிடாமல் இருக்க நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பார்த்து குழந்தைகள் வளரும். நீங்கள் இழுக்கப்பட மாட்டீர்கள்.

ஆனால், இந்த உலகில் பாவம், புண்ணியம் என்று ஒன்று இருக்கிறது. அதன்படி, அவர்களால் அந்த விளைவுகளில் இருந்து தப்பிக்க முடியாது. நாளாந்த செய்தித் தாள்களைப் புரண்டும் போது, சிறுவர்களுக்கு எதிராகத் துஷ்பிரயோக செய்திகளும், முதியோருக்கு எதிரான கொடுமை தொடர்பிலான செய்திகளும் இடம்பிடித்திருக்கும்.

இந்தச் சிறுவர்களுக்கிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக சர்வதேச சிறுவர் தினம், 1954ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நமது நாட்டை பொறுத்தவரையில் பல அமைப்புகள், பல்வேறான நிகழ்வுகளை நடத்துகின்றன. அதற்கு, சிறுவர்களை அழைத்துச் செல்வது சகலருடைய பொறுப்பாகும்.

சிறுவர் காலத்தில், நாம் கற்றுக்கொள்ளும் செயற்பாடுகளே, பிற்காலத்தில் செயலூக்கம் பெறுகின்றன. ஆகையால், முதியவர்களுக்கு எவ்விதமான தீங்குகளையும் இழைக்காது, சிறுவர்களைப் பாதுகாத்து, வீட்டுக்கு மற்றுமல்லாது, நாட்டுக்கும் நற்பிரஜைகளாக்கவேண்டும். அதற்கு இந்த நாள் மட்டுமே போதாது என்பதை நினைவில் கொள்வோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறந்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்க நிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களைக் காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாசம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

நன்றி –பருத்தியூர் பால.வயிரவநாதன்

மொஹமட் பாதுஷா

பொதுத் தேர்தல்:

# வழக்கமான முஸ்லிம் அரசியலுக்கு சவால்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சூடு ஆறுவதற்கு இடையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக 3 எம்.பிக்களையும் சொற்பளவான வாக்குகளையுமே கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்று, அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியான இரு நாட்களுக்குள்ளேயே பொதுத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெறுவார் என்பதையோ பாராளுமன்றத்தின் காலம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பதையோ சற்றும் எதிர்பார்த்திராத அரசியல்வாதிகள், முன்னாள் எம்.பிக்கள் ஆடிப்போய் இருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதுவரை நடைபெற்ற தேர்தல்களை விட இந்தப் பொதுத் தேர்தல் வித்தியாசமான ஒரு களமாக அமைந்திருக்கின்றது.

வழக்கமாக ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி அல்லது பொதுஜனப் பெரமுன ஆட்சியிலோ அதிகாரத்திலோ இருக்கின்ற போதுதான் தேர்தல்கள் பெரும்பாலும் இடம்பெறும்.

இந்த முறை பழைமைவாய்ந்த அல்லது பிரபலமான ஆட்சியாளர்கள் அங்கம் வகிக்கின்ற கட்சிகள் அதிகாரத்திலும் இல்லை, பிரதான எதிர்க்கட்சியாகவும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்தத் தேர்தல் நடைபெறப் போகின்றது.

அதிகாரக் கதிரையில் அகலக் கால் போட்டு உட்கார்ந்திருந்த பலர் இதனை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

இந்தத் தேர்தல் எல்லோருக்குமே சவாலானதுதான். ஜனாதிபதி அனுரகுமாரவின் என்.பி.பி. கட்சி தனது ஆசனங்களின் எண்ணிக்கையை 113ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற உடனேயே பொதுத் தேர்தல் நடைபெற்றதால் என்.பி.பிக்கு ஆதரவு அதிகம் கிடைக்கும் என கருதலாம் என்றாலும், பெரும்பான்மை பெறுவது என்பது இலகுவான இலக்கல்ல.

தனியே ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது பொதுஜனப் பெரமுன கட்சியோ ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய கள நிலை இல்லை.
என்.பி.பி. தவிர, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புக்கே அந்தக் கனி கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பார்த்தால், ரணில் அணியும் சஜித் அணியும் இணைந்து போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

ஆகவே, அந்த சூத்திரத்தை பொதுத் தேர்தலில் பயன்படுத்துவதற்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

ஆனால், அது எந்தளவுக்கு சாத்தியம் என தெரியவில்லை.

தமிழர் அரசியலில் இன்னுமொரு புதிய அரசியல் அணியையும் உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இந்தப் பின்னணியில் வடக்கு, கிழக்கின் தமிழ் மக்களின் வாக்குகள் மேலும் பிளவுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதாகவே அனுமானிக்க முடிகின்றது.

இதேவேளை, இந்த பொதுத் தேர்தலில் வழக்கமான முஸ்லிம் அரசியல்தான் மிகவும் சவாலான கள நிலையை எதிர்கொண்டிருக்கின்றது. சிங்கள மக்களும் வாழ்கின்ற பிரதேசங்களில் பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஸ்லிம் எம்.பிக்களுக்கும் இந்த தேர்தல் களம் மிகச் சவாலாகவே அமையும்.

முஸ்லிம் தனித்துவ அரசியல் என்று சொல்லிக் கொண்டு, தலைவர்களாகவும், தனபதிகளாகவும் தம்மைச் சித்திரித்துக் கொண்டு ஆனால், சமூகத்திற்கு எந்த உருப்படியான பணியையும் செய்யாமல் பல வருடங்களாக ஏமாற்றிக் கொண்டிருந்த, முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்களுக்கு இந்தத் தேர்தல் வாழ்வா சாவா போராட்டமாகவே அமையப் போகின்றது.

முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களின் உரிமை, அபிலாஷை என்று கூறிக்கொண்டு கால் நூற்றாண்டுக்கும் மேலாகக் குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று வருகின்றனர். இதனால் பலர் இதுவரை பாராளுமன்ற உறுப்பினராகப் பல தடவை பதவி வகித்திருக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸிற்கு மாற்றுத் தெரிவாக வந்த மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் இதர முஸ்லிம் அணிகளும் ஒரே விதமான அரசியலையே செய்து வருகின்றன. இதனால், கடந்த பல வருடங்களாக இந்த முஸ்லிம் எம்.பிக்களின் அரசியல் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களால் பெரிதும் விமர்சிக்கப்படுகின்றது.

“இவர்களை மாற்ற வேண்டும்”, “இந்த ஏமாற்று அரசியல் கலாசாரத்தைப் புரட்டிப்போட வேண்டும்” என்ற கருத்துக்கள் பல வருடங்களாகவே முன்வைக்கப்பட்டாலும், கிழக்கு மாகாணம் மற்றும் வடக்கின் முஸ்லிம்கள் பெரும்பாலும் ‘காங்கிரஸ்கள்’ விடயத்தில் மந்திரித்து விடப்பட்டவர்கள் போல செயற்பட்டதால் எந்த மாற்றமும் நிகழவில்லை.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் சஜித் பிரேமதாசவுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. சில பிரதேசங்களில் ரணில் வெற்றிபெற்றார் எனலாம்.

இருப்பினும், முஸ்லிம் கட்சிகளின் அடித்தளமாகக் கருதப்படும் அம்பாறை மாவட்டம் உள்ளடங்கலாக நாட்டில் பல முஸ்லிம் பிரதேசங்களில் கணிசமான முஸ்லிம்களின் வாக்குகள் அனுரகுமாரவுக்கு விழுந்தன என்பதை மறுக்க முடியாது.

ஜே.வி.பி. மீது எத்தனையோ விமர்சனங்கள் இருந்தாலும், சரியான அரசியலை முஸ்லிம் கட்சிகள், எம்.பிக்கள் கொண்டு செல்லத் தவறியதால் மக்கள் ஒரு மாற்றுத் தெரிவாக ஜே.வி.பியை கூட கருதுவதற்குக் கூட தயங்க மாட்டார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

பொதுவாக ஒரு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியே அதற்கு உடனடுத்ததாக நடைபெறும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் அதிகமாகும். எனவே, என்.பி.பி. போன்ற கட்சிகளின் சார்பாக முஸ்லிம் பிரதேசங்களில் பலமான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால் (அது எந்தளவுக்கு சாத்தியம் எனத் தெரியாது) அது மாமூலான முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு கடும் சவாலைத் தோற்றுவிக்கும்.

முஸ்லிம் தலைவர்களும், கடந்த நான்கைந்து பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் உண்மையில் சமூகம் சார்ந்த அரசியலைச் செய்யவில்லை என்பது நிதர்சனமாகும்.

எனவே, இந்தத் தருணத்திலாவது சரியான வியூகத்தை அமைக்காவிட்டால் மாற்று அணிகள் தமது கோட்டைகளில் கொடியேற்றி விடலாம் என்ற அச்சம் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு உள்ளன.

என்னதான் சொன்னாலும், முஸ்லிம்களுக்கான அரசியல் வேறுபட்டது. அதற்கு சில தனித்துவப் பண்புகள் உள்ளன. ஆனால், முஸ்லிம் கட்சிகள், அரசியல்வாதிகளுக்கு ஒரு தேசிய மட்டத்திலான பார்வையும் இருக்க வேண்டும். இதன் அர்த்தம் பணத்திற்காகவும் பதவிக்காகவும் சோரம் போவதல்ல.

ஆனால். மர்ஹூம் அஷ்ரபிற்கு பிறகு றவூப் ஹக்கீம் உள்ளிட்ட தலைவர்களாலும் முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களாலும் அந்தப் பணி சரிவரச் செய்யப்படவில்லை.

இது தொடர்பில் சமூகத்தின் மத்தியில் இருந்துவந்த வெறுப்பு, இந்த முறை தேர்தலில் வெளிப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மையாகும்.

அனுரகுமார திசாயக்க தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றார் என்பதற்காக முஸ்லிம் பிரதேசங்களில் அந்தக் கட்சியின் வேட்பாளர்களே வெற்றி பெறுவார்கள் என்று கருதமுடியாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட மக்கள் வாக்களிக்கலாம். அதனால் முஸ்லிம் கட்சி வேட்பாளர்கள் மண் கவ்வலாம் என்ற எச்சரிக்கை உணர்வு ஏற்பட்டிருக்கின்றது.

இது காலவரை முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால பிரச்சினைகளைத் தீர்க்காத, காத்திரமான சேவைகளைச் செய்யாத அரசியல்வாதிகளுக்கு இனியும் வாக்களிப்பதா? அல்லது அவர்களது கேடுகெட்ட அரசியலைப் பார்த்துக் கொண்டு வாழாவிருந்தது மட்டுமன்றி, தானும் சமூகத்திற்கு எதுவும் செய்யாதிருந்த முஸ்லிம் தலைவர்களால் நிறுத்தப்படும் புதுமுகங்களை எந்த அடிப்படையில் நம்புவது என்று முஸ்லிம் மக்கள் சிந்திப்பது நியாயமானதுதானே?!

ஆகவே, ஒரு குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளை மீண்டும் மீண்டும் வேட்பாளர்களாகக் களமிறக்கிக் கொண்டு, தேர்தல்களைக் கடந்து போன முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகளால் இந்த முறை அப்படிச் செய்ய முடியாத சிக்கல் தோன்றியுள்ளது.

கால்மேல் கால் போட்டுக் கொண்டு, மிக இலகுவாக முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைப் பெற்று, பாராளுமன்றத்திற்குச் சென்று, கதிரையைச் சூடாக்கியவர்கள் இந்தத் தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என தெரியாதுள்ளனர்.

பாடல்களை ஒலிக்கவிட்டும், வீராப்புப் பேச்சுக்களைப் பேசி மக்களை மயக்கியும் முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் அரசியல் அணிகள் புது வியூகங்கள் பற்றி இப்போதுதான் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்தப் பின்னணியில் ஏற்கெனவே காலகாலமாக போட்டியிட்டு எம்.பி.யானவர்கள் தோற்றுப் போகக்கூடிய நிலை இருப்பதால், புதியவர்களைக் களமிறக்க வேண்டும் என்ற கருத்துக்களும், அதனை மையப்படுத்தி உள்வீட்டுக் குடுமிச் சண்டைகளும் ஆரம்பமாகியிருக்கின்றன.

## கடிதங்கள்

### யானை வெடிகள் வேண்டும்


அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வெடிகள் வழங்குமாறு பிரதேச செயலாளர்களிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள எல்லைக் கிராமங்களிலும் பொது மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் அப் பிரதேசங்களில் வாழும் மக்கள், இரவு வேளைகளில் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அக்கரைப்பற்று, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் யானைகள் நடமாடுவதால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு யானை வெடிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எம்.எஸ்.எம்.ஹனீபா



# சர்வதேச முதியோர் தினம்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

“முதியோர்களை மதிக்கத் தெரியாத ஒரு சமூகம் அதனது மூல வேர்களை, முன்னோர் வழிவந்த மரபினை, தோற்றத்தினை, மறுத்து அதனது எதிர்காலத்தினை ஆபத்தில் ஆழ்த்தி விடுகின்றது”, என்ற கூற்றில் எத்துணை உண்மை பொதிந்துள்ளது. முதியோர்கள் தங்களுடைய சமூகத்திற்கு மிகப் பெரும் பங்களிப்பினை ஆற்றுவதோடு மட்டுமல்லாது, அவர்கள் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல படிப்பினைகளையும், கருத்துக்களையும், எடுத்துரைத்து அவர்களை நல்வழிப்படுத்துகின்றனர்.

இன்று சர்வதேச முதியோர் தினமாகும்.

முதியோர்களின் பிரச்சினைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 14ஆம் திகதி டிசம்பர் மாதம் 1990ஆம் ஆண்டு அன்று கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கு அமைய இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1991ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

முதியோர்களது சவால்கள் மற்றும் வாய்ப்புகளை அங்கீகரிக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் சர்வதேச முதியோர் தினத்தின் 34ஆவது நினைவு தினம் “கண்ணியத்துடன் முதுமை: உலகளவில் முதியோர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம்” என்ற கருப்பொருளில் கவனம் செலுத்தும்.

முதுமை என்பது வயதின் அடிப்படையில் ஓர் இலக்கம் மாத்திரம் தான்.

இன்று உலகில் முதியோர்கள் பல்வேறு பட்ட சாதனைகளை சாதித்து வருவதனை ஊடகங்களின் மூலமாக எம்மால் அறிய முடிகின்றது.

இளமைக் காலத்தில் தான் மேற்கொண்ட தொழில் முயற்சியில் தோல்வியுற்று அதனை முதுமைக் காலத்தில் சாதித்துக் காட்டிய சாதனையாளர்களும் இருந்திருக்கின்றனர் என்கின்ற பொழுது முதுமை கூட , ஒரு புதுமையைப் படைத்திருக்கின்றது எனலாம்.

KFC எனும் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கர்னல் சண்டர்ஸ். இவர் வாழ்க்கையில் 60 வயது வரை தோல்வியைத் தவிர வேறு எதனையும் சந்தித்ததில்லை.

தனது 65ஆவது வயதில் ‘KFC’ என்ற நிறுவனத்தை ஆரம்பித்து இன்று உலகில் பல்வேறு கிளைகளை நிறுவி தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கியவர்.

இங்கு வயது அவருக்கு ஒரு தடையாக இருந்தது இல்லை.

பொதுவாகவே 60 வயதுக்கு மேற்பட்டவர்களை முதியோர்களென வரையறுப்பர் .



இதன் காரணமாகவே இலங்கை போன்ற நாடுகளில் 60 வயதினை பூர்த்தி செய்த அரசாங்க உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற வேண்டுமென சட்டம் மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

முதுமை என்னும் போது, அது 60 வயதில் ஆரம்பமாவது என குறிப்பிடுவது தவறானக் கருத்தாகும்.

ஒரு குழந்தை பிறந்த நாளிலிருந்து அது வளர்ந்து வரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் முதுமை என்கின்ற நிகழ்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

1950ஆம் ஆண்டிற்கும் 2010ஆம் ஆண்டுக்கும் இடையிலான உலக ரீதியான ஆயுள் எதிர்பார்ப்பானது 46 வயதில் இருந்து 68 வயதாக அதிகரித்துள்ளது.

2021ஆம் ஆண்டில் உலகில் சுமார் 761 மில்லியன் மக்கள் 65 வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவர்களாகக் காணப்பட்டனர்.

2050ஆம் ஆண்டு இவர்களின் இந்த எண்ணிக்கை, 1.6 பில்லியனுக்கு மேல் அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகின்றது.

கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள வயோதிபர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 261 மில்லியன்களாகும்.

2050ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை சுமார் 573 மில்லியனாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இலங்கையில் வசிக்கும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களின் வளர்ச்சி வீத எண்ணிக்கையானது 2037ஆம் ஆண்டு இருபத்திரெண்டு சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான அதிகரிப்பானது நாட்டின் பொருளாதார ரீதியில் பெரும் செல்வாக்கு செலுத்தக்கூடிய தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. நீண்ட ஓய்வு காலத்திற்கான வருமானம், அவர்களது நுகர்வுக்கு ஏற்ற உணவு உற்பத்தி, போக்குவரத்து, இருப்பிடம் போன்றவற்றில் மாற்றங்கள்
ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது. இதற்கேற்ப அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றன.

வயதான காலத்தில் முதியவர்கள் தமது இளமைக் காலம் போல ஓடி, ஆடி செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது வயோதிபர்கள் மத்தியில் நிலவும் சுகவீனம், வறுமை, தனித்திருத்தல், ஆண்களை விட பெண்களின் ஆயுட்கால அதிகரிப்பு என்பன அரசுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு சவாலாக அமையும் எனலாம்.

வார்த்தைகள் தடுமாறுவது வயோதிபத்தின் தடுமாற்றம் தான்.

வார்த்தை தடுமாறினாலும், வாழ்க்கை தடுமாறாமல் வருங்கால சமுதாயத்தை வழி காட்ட வல்லவர்கள் வயது முதிர்ந்தவர்கள்.

மாறி வரும் இன்றைய உலகில் இவர்களின் முக்கியத்துவம் உணரப்படாமலிருப்பது துரதிர்ஷ்டமான ஒன்றே.

பல்வேறு நோய்களுடன் போராடி வாழ வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு வயோதிபர்கள் இன்று ஆளாவது தவிர்க்க முடியாததாகின்றது.

முதியவர்கள் இயலாமை நிலைமையில் இருக்கும் பொழுது, அவர்களை சரியாக கவனிக்காமை, உரிய சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை, உரிய வகையில், உரிய நேரத்திற்கு உணவளிக்காமை, அவர்களை தனிமைப்படுத்தி வைத்திருத்தல், அவர்களின் கருத்துக்களுக்கு செவி கொடுக்காமை, துன்புறுத்தல், வார்த்தைகளால் காயப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் அவர்களை மிகவும் பாதிக்கின்ற விடயங்களாக அமைகின்றன.

முதுமையில் ஏற்படக்கூடிய நோய்களான மறதி, பக்கவாதம், உதறுவாதம் எனப்படுகின்ற பார்க்கின்சன் (Parkinson disease), மூட்டு வலி போன்ற பல்வேறு உபாதைகளுக்கு உள்ளானவர்களுக்கு தொடர்ச்சியான சிகிச்சையளித்தல் அவசியம்.

ஆயினும், இன்றும் பல குடும்பங்கள் போதிய நிதி வசதியின்றி, பொருத்தமான சிகிச்சை பெறமுடியாத நிலையிலிருப்பது கவலைக்குரிய விடயமே.

முதியவர்களும் முடிந்தளவு தங்களது பழைய நண்பர்களைச் சந்தித்தல், பழைய நினைவுகளைப் பரிமாறிக் கொள்ளுதல் போன்ற மகிழ்ச்சியான சூழ்நிலையினை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தமது மனதை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடியும்.

முதியவர்களுக்கு சிறந்த பராமரிப்பு, அன்பான வார்த்தைகள், ஆறுதல், மகிழ்ச்சி என்பன அவசியமாகின்றன.

முதியோர்களின் உள ரீதியிலான மகிழ்ச்சியை ஏற்படுத்தும் முகமாக, அவர்களுக்கென தனியான தொலைக்காட்சி சேவையினை ஆரம்பிப்பது அவசியம் எனலாம்.

இச்சேவையில் உள நலம், உடல் நலம், பொழுது போக்கு, ஆன்மிகம், உணவு முறை, மற்றும் குடும்ப நலன் சார்ந்த நிகழ்ச்சிகளை உள்ளடக்கலாம்.

மேலும், அவர்களுக்கான பாதுகாப்பு, உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகம் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பளித்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை முதியோர் அனுபவிக்க வழிவகை செய்தல் போன்ற முதியோர் நலன்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகின்றது.

முதுமை என்பது வயதில் இல்லை. அது ஒருவரது செயலிலும், எண்ணத்திலும் தான் தங்கி உள்ளது. முதுமையால் ஏற்படும் தனிமை உணர்வு தான் வயோதிபத்தை உணர்த்துவிக்கின்றது.

இந்த சிந்தனையைத் தடுக்கும் ஆற்றல் கூட்டுக் குடும்பத்திற்கும், நட்பு வட்டத்துக்கும், சமூக உறவுகளுக்கும், உண்டு. சுற்றம் சூழ இருக்கும் பொழுது கடந்து போன , மறந்து போன பல விடயங்களைக் கூட இருப்பவர்களுடன் நினைவூட்டப்படுகின்ற பொழுது உடலளவிலும் உள அளவிலும் இளமை உணர்வு மீண்டும் தளிர்த்தோங்கும். எனவே, முதியவர்களை அரவணைக்கும் கடமை சொந்த உறவுகளுக்கு மட்டுமல்லாது, சமூகத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு எனலாம்.

இளமைக் காலத்தில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை, கண்ணை இமை காப்பது போல, காத்து அவர்களை வளர்க்கின்றனர்.

வயோதிபக் காலத்தில் வயதானப் பெற்றோர்களைப் பராமரிக்க வேண்டியது பிள்ளைகளின் மிக முக்கிய கடமையாகும்.

தூர இடங்களில் இருக்கும் பிள்ளைகள் தமது பெற்றோர்களுக்கு தொலைபேசியின் ஊடாக கதைக்கும் பொழுது பெற்றோர்கள் அடையும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

முதியவர்களது அர்ப்பணிப்பு, தியாகம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தங்களது துறைகளில் காட்டிய ஆர்வம், அதன் மூலம் தமது நாட்டிற்கும், குடும்பத்திற்கும் வாழ்நாள் பூராவும் ஆற்றிய சேவைகளை நினைவுபடுத்தி அவர்களைப் பாராட்டுவது அவசியம்.

அவர்களிடம் இருக்கின்ற அறிவு, விவேகம், அனுபவம் , ஆகியவற்றை நாம் அவர்களிடமிருந்து தெரிந்துக் கொள்வதன் ஊடாக, அவர்கள் நாம் வாழும் இந்த உலகில் எத்தகைய பங்களிப்பினை அளித்திருக்கிறார்களென அறிந்து அதற்குரிய மரியாதையை செலுத்த நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

அவர்களது ஈடிணையற்ற பங்களிப்பினை நினைவு கூர்ந்து அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவது அரசாங்கங்களின் கடமையாகும்.

முதியோர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும் 2000ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க முதியோர்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலத்தின் கீழ் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் முதியோர் சனத்தொகை துரிதகதியில் அதிகரிக்கும் ஒரு நாடாக இலங்கை விளங்குகின்றது. எனவே, இச்செயலகமானது எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள முதியோர் சனத்தொகையினைக் கருத்திற்கொண்டும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டும் நிறுவப்பட்டுள்ளது.

“முதியோர்களின் நலன்களை மேம்படுத்துதல், உரிமைகளைப் பாதுகாத்தல் என்பனவற்றினூடாக அவர்கள் கௌரவமாகவும், கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வழி அமைத்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் முதியோர்களுக்கான பங்களிப்பின் தேவையினை உணர்த்துதல் மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலே இந்த செயலகத்தின் பணிக் கூறுகளாகும்”

மூத்தக் குடிமக்களுக்கு ஏற்ற மதிப்பினை வழங்குவதோடு அவர்களுடைய அறிவையும், விவேகத்தையும், நடைமுறை அறிவினையும் பெற்றுக் கொள்வதன் மூலமாக நாம் எவ்வாறு திறமையாகச் செயற்படலாம் என்பதனை

இளைய சமூகத்தினர் அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

உலகப் போக்கு துரிதமாக மாறிக் கொண்டு வருகின்றது.

அதற்கேற்ப இன்றைய இளையத் தலைமுறையினரும் தமது வாழ்க்கைப் பயணத்தினை கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இதனால் முதியவர்களும் தமது விடாப்பிடியான நிலையிலிருந்து மாறி , இளையவர்களுடன் ஓரளவாவது இணைந்து செயல்படுவது காலத்தின் தேவையாக உள்ளது.


“ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கின்றான். முதலில் குழந்தை. பிறகு மாணவன், பின்னர் விடலைப் பருவம், தொழில் வாய்ப்பினைப் பெற்ற பின்னர் குடும்பஸ்தன் ஆகின்றான். காலசக்கரத்தின் அபரிமிதச் சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக் கண்ணாடி அணிந்து , முகம் சுருங்கி, உடல் மெலிந்து, பல், கண்பார்வை குறைவடைந்து, கூன் விழுந்து, முதுமையாகி மறைவது தான் சரித்திரமென “பிரபல ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் கூறுகின்றார்.

மொத்தத்தில் இது தான் வாழ்க்கையின் யதார்த்தம்.

அனைத்து முதியோர்களுக்கும், அவர்கள் ஆற்றிய உயர்ந்த சேவைகளுக்கும், எங்களது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

# 'தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு'

ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



தம்பலகாமத்திலே பிறந்த த.ஜீவராஜ் தனது பிறப்பிடமான ஊரிலும் பொதுவாகத் தமிழர் சமுதாயத்திலும் மிகுந்த ஈடுபாடும்,அபிமானமும் கொண்டவர்.வேகமாக மாறிவரும் சூழ்நிலையில் அவை இரண்டும் சீர்குலைந்து செல்வதை சொந்த வாழ்க்கை அனுபவத்தால் உணர்ந்தவர்.

தமிழர் வாழும் ஊர்களையும், அவற்றுக்குரிய பண்பாட்டு அடையாளங்களையும் பேண வேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்கும் விதமாக எழுதுவதை நோக்கமாகக் கொண்டு பணிகளைச் செய்கின்றார்.

தம்பலகாமம் ஊர்ப்பெயர் பற்றி ஆசிரியர் கூறும் விளக்கங்கள் மிகவும் பொருத்தமானவை , ஆதாரப்பூர்வமானவை. கமம் பற்றிய தொல்காப்பியக் குறிப்பினை ஆதாரமாகக் கொண்டமை அவரது ஆளுமையின் சிறப்பாகும்.

வடமாகாணத்திலே வயல் நிலங்களைக் கமம் என்று சொல்வார்கள். வேளாண்மை செய்வோரைக் கமக்காரன் என்று சொல்வதுண்டு.

ஒரு குறிப்பிட்ட இடத்தின் பண்பாட்டு வரலாறும்,புவியியலும் இணையும் ஆய்வியலை இடப் பெயரியல் என குறிக்கப்படுகின்றது.

இடப் பெயரியல் ஆய்வுகள் பல சந்தர்ப்பங்களில் ஒரு பிரதேசத்தின் தெளிவற்ற வரலாற்று நிகழ்வுகளை மீட்டெடுத்திருக்கின்றன. பொதுவாக இடப் பெயர்கள் அந்தந்த மண்ணின் பண்பாட்டு வேர்களையும், அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்வியலையும் இணைக்கும் குறியீடாக உணரப்படும்.

தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வை இலக்கியத்தளத்தில் இருந்தும் மிகையுணர்ச்சி இன்றி ஆதாரங்களை த.ஜீவராஜ் முன்வைத்ததுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமப்பற்று சிறப்புத் தனித்துவமுடையது. இந்நூலின் அட்டைப் படத்தினூடாக தம்பலகாமத்தின் செழுமை புலப்படுகிறது. ஆதி கோணேஸ்வரர் ஆலயத்தின் பிரம்மாண்ட தோற்றமும் வயல் நிலங்களின் அழகும் குறைவின்றி திரு.த ஜனார்த்தனனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலானது தம்பலகாமம் பிரதேசம், கல்வெட்டுகள், ஊர்ப்பெயர் திரிபு போன்றவற்றைத் தெளிவாக ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சிந்தனைத் தெளிவிற்காக நேற்றைய வரலாறுகளின் உண்மைத் தன்மை வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். இது இளைய தலைமுறைக்குச் செய்யப்படும் மிக முக்கிய சமூகக் கடமையாகும்.

ஜீவநதி இணையத்தளம் வழியாக வரலாற்றுத் தேடல்கள் பண்பாட்டு வரலாற்றுச் சித்திரமொன்றை தம்பலகாமப் பற்றுக்கு நூலாசிரியர் அளிக்கின்றார். தம்பலகாமம் என்ற பெயர் குறித்த ஆய்வு மிகையுணர்ச்சி இல்லாத கல்வி ஒழுங்கில் மிக நேர்த்தியாக அமைந்திருப்பது சிறப்பானது.

'தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு' என்ற இந்த நூல் வரலாற்று எழுத்தியலின் பண்புகளுக்கு அமைவாக ஆவணங்கள்,சாசன ஆதாரங்கள், இலக்கிய சான்றுகள் என்பவற்றோடு பல முதன் நிலைத் தரவுகளையும்,தேடல் அனுபவக் குறிப்புக்களையும்,விமர்சனங்களையும் உள்ளடக்கியுள்ளது.

தம்பலகாமம் விவசாயக் குடும்பங்கள் இன்றுவரை விவசாயத்தினைத் தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். நெற் செய்கையினைப் போலவே மேட்டு நிலங்களில் பயிரிடப்படும் சேனைப்பயிர்ச் செய்கையிலும் இங்குள்ள மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயம் தவிர்த்து அரச சேவை, வணிகம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கூலி வேலை, ஏனைய வேலைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றின் மூலம் தமக்கான வருவாயைத் தேடிக்கொள்கின்றனர். தம்பலகாமம் நெல்லுக்கும். எருமைப்பால் மூலம் பெறப்படும் தயிருக்கும் பிரபலமானது என்பது அனைவரும் அறிந்ததே. தற்காலத்தில் தம்பலகாமம் பிரதேச மக்கள் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கிற தொழில் பற்றிய விரிவான விபரம் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் எனும் ஊரின் பெயரினை ஆவணப்படுத்தும் ஐயனார் திடல் கல்வெட்டு இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் தம்பலகாமத்தின் வயல் பகுதியில் நிறுவப்பட்டது.

234 ஆண்டுகளுக்கு முன்னர் இக் கல்வெட்டினை வாசிப்பதற்கு அன்னிய நாட்டவர் ஒருவர் முயற்சித்த போதும், தம்பலகாம வாசிகளின் ஒத்துழைப்பின்மையால் அது கைகூடாமல் போனது. இதற்குப்பிறகு 144 ஆண்டுகளின் பின்னர் 1930ஆம் ஆண்டளவில் பேராசிரியர் பரணவிதான அவர்களினால் இக்கல்வெட்டின் முன்பக்கம் படியெடுக்கப்பட்டு கொழும்பு அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டது. அங்கு அது வாசித்து வெளிப்படுத்தப்படாமல் சுமார் 73 ஆண்டுகள் இக்கல்வெட்டின் மைப்படி கவனிப்பாரற்றுக் கிடந்தது.

கல்வெட்டின் மைப்படியை வாசித்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் 2005ஆம் ஆண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புரட்டாதி மாத 'பண்பாடு' என்ற சஞ்சிகையில் முதன்முறையாக 'தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு' என்ற தலைப்பில் பொலன்னறுவை காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம்) என்னும் உபதலைப்புடன் கல்வெட்டின் வாசகங்களை வெளியிட்டார். இதன்மூலம் முதன்முறையாகத் தம்பலகாம ஊர் என்று கல்வெட்டு மூலம் இந்த இடப்பெயர் அழைக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது கல்வெட்டுக்கள் தொடர்பான நிரூபிக்கப்பட்ட தகவல்கள் நூலில் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழர் வரலாறு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. எனினும், இந் நூலூடாக CODE-தம்பலகாமம் கல்வெட்டு கடந்துவந்த 250 வருடகாலப் பயணம் இலங்கைத் தமிழர் வரலாற்று ஆதாரங்களை ஆவணப்படுத்துவதில் உள்ள சிக்கல் நிலையை ஓரளவுக்கேனும் தெளிவுபடுத்தியுள்ளார் ஆசிரியர்.

ஊரின் பெயர் தம்பலகாமமா? தம்பலகமமா? என்ற கேள்விக்கு விடையை தேடுவதினூடாக, 'தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு' நூல் உதித்துள்ளது. நாடோடிக் குழுக்களாக வாழ்ந்த ஆதிகால மக்கள் ஒரு குறித்த இடத்தில் தங்களை நிலைநிறுத்தி வாழ முற்பட்டபோது, இடப்பெயர்கள் தோற்றம் பெறத் தொடங்கியது எனலாம்.

தமிழர்கள் இடங்களுக்குப் பெயர் சூட்டுவதில் சில ஒழுங்கு முறைகளைக் கொண்டிருந்தனர். அவர்களால் சூட்டப்பட்ட இடப்பெயர்கள் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் தொல்காப்பியர் கூற்றுக்கமைய அங்கு வாழ்ந்த மக்களுடன் தொடர்புடைய வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்ற தன்மை வாய்ந்தவையாக அமைந்திருந்தன. அவ்வாறு அவர்களால் சூட்டப்பட்ட பெயர்களைச் சூட்டப்பட்ட பெயர்களை அவற்றின் பொதுவான தன்மையின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கலாம்.

அந்த வகையில், நூலாசிரியர் தனது நூலில் காண்பிக்கும் உதாரணங்களில் உள்ள இடப் பெயர்கள், நீர்நிலைப் பெயர்கள்,தம்பலகாமப் பற்று பிரதேசத்தினுள் உள்ளடங்கி இருக்கும் நீர்நிலை இடப் பெயர்கள், நிலப் பெயர்கள், தாவரப் பெயர்கள், பறவைப் பெயர்கள், விலங்குப் பெயர், கடவுள் பெயர்கள், மனித நாகரீக வளர்ச்சியில் கடவுள் வழிபாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கிய காலப்பகுதியில் இருந்து இடப் பெயரிலும் கடவுள் பெயர்கள் இடம்பிடிக்கத் தொடங்கின.

இவை அவ்விடத்திலிருந்த ஆலயங்களுடனோ, சமய வரலாற்றுடனோ தொடர்புடையனவாக இருப்பதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக. நாயன்மார்திடல், ஐயனார்திடல், பத்தினிபுரம், சிவசக்திபுரம்.

அரசர், அதிகாரிகள் பெயர்கள்-குறித்த பிரதேசங்களில் அதிகாரம் மிக்கவர்களாக இருந்த அரசர், அதிகாரிகளின் பெயர்கள் இடப்பெயராக பரிணமித்துக் கொண்டன. உதாரணமாக. வெண்டரசன் குளம், மணியரசன் குளம், குஞ்சடப்பன் திடல், பாண்டியன் ஊற்று. கடவுள்.

அரசர், அதிகாரிகள் பெயர்கள் போலவே, அந்த இடத்துடன் தொடர்புடைய புராண, இதிகாச இலக்கியப் பெயர்கள் இடப்பெயரில் இடம்பிடித்தன. உதாரணமாக சூரன்கல் தொழில்முறை சாதிப் பெயர்கள், தொழில்முறை சாதிப் பெயர்களால் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்கள் வாழ்ந்த இடங்களும், அவர்கள் பயன்படுத்திய வயல், தோட்டம், சேனை முதலான இடங்களும் பெயரிடப்பட்டன.

இவ்வாறான ஆய்வுகள் இங்கு வாழ்ந்த மக்களின் இருப்பையும் உறுதிப்படுத்துவதோடு, அவர்களது தொன்மையான வரலாற்றுப் பதிவுகளையும் வெளியுலகிற்குக் கொண்டு வருவதற்கான சிறந்த வழிமுறையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தம்பலகமுவ என்ற பெயர், அரச ஆவணங்களிலும், பொது நிறுவனங்களிலும் வலுவாகக் காலூன்றிவரும் காலகட்டத்தில் புதிது புதிதாகத் தோன்றி வரும் புத்தர் சிலைகள் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய வாசல் வரை வந்துவிட்ட சூழ்நிலையில் எண்ணூறு வருடப் பழைமை வாய்ந்த தம்பலகாமம் கல்வெட்டு என்னும் சாசன ஆதாரத்தினை தம்பலகாமம் என்னும் வரலாற்றுப் புகழ் கொண்ட ஊரின் பெயர் ஆய்வின் ஆதாரமாக இந்நூல் அமைகிறது.

CODE-தமிழ் மக்களது அடையாளங்களையும் வரலாற்றையும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இன்று தமிழர்கள் உள்ளோம். அந்த வகையில் தமிழர்கள் வாழ்ந்த தம்பலகாமம் பிரதேசத்தின் தொன்மங்களை நூலாக வெளியிட்டமை எம் இனத்தின் வரலாற்றை அடையாளப்படுத்தியுள்ளது.

மாற்றப்படுகின்ற, அபகரிக்கப்படுகின்ற தமிழ் மக்களது வரலாறும் நிலங்களும் ஆதாரப்பூர்வமான நூல்களை வெளியிடுவதன் ஊடாக ஆவணப்படுத்தப்படுகிறது. த.ஜீவராஜ்ம் 'தம்பலகாமம் ஊர் பெயர் ஆய்வு' என்னும் நூலின் ஊடாக தனது வரலாற்றுக் கடமையை ஆற்றியுள்ளார் என்பதை மறுக்க முடியாது. வைத்தியராக இருந்தாலும், தனது ஊரின் பெருமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதலால் இலக்கியத் துறையில் ஜீவராஜ் முனைப்புடன் செயல்படுவதைக் காணமுடிகிறது.

## அனுஷ்காவின் 'பாகமதி 2'



கடந்த 2018இல் அனுஷ்கா முக்கிய வேடத்தில் நடித்த திரைப்படம் 'பாகமதி'. ஜி.அசோக் இயக்கத்தில் உருவான இந்த படத்தில் அனுஷ்காவுடன் ஜெயராம், உன்னி முகுந்தன், ஆஷா சரத், தலைவாசல் விஜய் உள்பட பலர் நடித்திருந்தனர். தமன் இசையமைப்பில் உருவான இந்த படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் வெளியானது. இந்த படம் பட்ஜெட்டை விட இருமடங்கிற்கும் அதிகமான இலாபத்தை கொடுத்ததாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், 6 ஆண்டுகளுக்கு பிறகு 'பாகமதி' படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்க இந்த படத்தின் இயக்குநர் அசோக் திட்டமிட்டுள்ளதாகவும், இதனை அவர் உறுதி செய்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், முதல் பாகத்தை விட அனுஷ்காவுக்கு இரண்டாம் பாகத்தில் வலுவான கேரக்டர் இருக்கும் என்றும், 2025ஆம் ஆண்டு இந்த படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது அனுஷ்கா, ஒரு தெலுங்கு மற்றும் மலையாள படத்தில் நடித்து வருகிறார். இந்த இரண்டு படங்களை முடித்ததும், அவர் 'பாகமதி 2' படத்தில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இரண்டு படங்களை தவறவிட்ட அரவிந்த்சாமி

உலகநாயகன் கமல்ஹாசனுடன் இரண்டு படங்களில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததாகவும், சில காரணங்களால் அந்த படங்களில் நடிக்க முடியவில்லை என்றும் அரவிந்த்சாமி அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கார்த்தி மற்றும் அரவிந்த்சாமி நடித்த 'மெய்யழகன்' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், இந்த படத்தின் ப்ரோமோஷனுக்காக அரவிந்த்சாமி பல பேட்டிகள் கொடுத்துள்ளார்.

அதில், ஒரு பேட்டியில் அரவிந்த்சாமியிடம், "ரஜினியுடன் நடித்துள்ளீர்கள், கமல்ஹாசனுடன் ஏன் நடிக்கவில்லை" என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "அன்பே சிவம் மற்றும் தெனாலி ஆகிய இரண்டு படங்களில் கமல்ஹாசனுடன் நடிக்க வாய்ப்பு வந்ததாக கூறினார்.

ஆனால், தெனாலி படத்தில் தான் நடிக்காதது நல்லவேளை என்றும், ஏனெனில், அந்த படத்தில் ஜெயராம் மிகவும் அருமையாக நடித்திருந்தார் என்றும் அவர் தான் அந்த கேரக்டருக்கு பொருத்தமானவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரவிந்த்சாமியின் இந்த பேட்டியை பார்த்த ரசிகர்கள், அன்பே சிவம் மற்றும் தெனாலி படங்களில் அரவிந்த்சாமி நடித்திருந்தால், வேறு லெவலில் இருந்திருக்கும் என்று கருத்து பதிவு செய்து வருகின்றனர்.



## அட்லியின் 6ஆவது படத்தில் 3 பிரபலங்களா?




இயக்குநர் அட்லியின் 6ஆவது திரைப்படத்தில் மூன்று பிரபலங்கள் இணைய இருப்பதாக கூறப்படுகிறது.

'ராஜா ராணி' என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமான இயக்குநர் அட்லி, அதன் பின்னர் 'தெறி', 'மெர்சல்' மற்றும் 'பிகில்' ஆகிய மூன்று விஜய் படங்களை எடுத்து சூப்பர்ஹிட் ஆக்கினார்.

அதன் பின்னர், ஷாருக்கான் நடித்த 'ஜவான்' திரைப்படத்தை இயக்கிய நிலையில், அவரது 6ஆவது படம் குறித்த தகவல்கள் அவ்வப்போது கசிந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், தற்போது வந்துள்ள தகவலின்படி, அட்லியின் 6ஆவது படத்தில் சல்மான் கான் நாயகனாக நடிக்க இருப்பதாகவும், இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க கிட்டத்தட்ட கமல்ஹாசன் ஒப்புக் கொண்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த தகவல் உறுதி செய்யப்பட்டால், சல்மான் கான் மற்றும் கமல்ஹாசன் ஆகிய இருவரும் இணையும் இந்த படம் மிகப் பெரிய பான் இந்திய படமாக உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்த படத்தில் இன்னொரு பிரபலமாக அனிருத் இணைவார் என்றும், அனிருத் இந்த படத்திற்கு இசையமைக்கும் அதிக வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மொத்தத்தில், சல்மான் கான், கமல்ஹாசன், அனிருத், மற்றும் அட்லீ ஆகியோர் இணையும் இந்த படம் இந்திய திரையுலகில் ஒரு பிரம்மாண்டமான படமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசியல் பேசும் 'தளபதி 69'

தளபதி விஜய் நடிக்க இருக்கும் 69ஆவது திரைப்படத்தை எச் வினோத் இயக்கவிருக்கும் நிலையில், தமிழக வெற்றி கழகத்தின் முதல் மாநாடு முடிந்த பிறகு படப்பிடிப்பு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், இந்த படத்தில் நடிக்கும் நட்சத்திரங்கள் தேர்வு நடைபெற்று வருவதாகவும், குறிப்பாக நாயகியாக நடிக்க மஞ்சு வாரியருடன் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், 'தளபதி 69' திரைப்படம் என்பது விஜய்யின் கடைசி படம் என்பதால், இந்த படம் ஒரு முக்கிய பிரச்சினையை மையமாகக் கொண்ட கதையம்சத்துடன் உருவாகும் என்று சொல்லப்படுகிறது.

'தளபதி 69' திரைப்படத்தின் கதை விவசாய பிரச்சனைகளை பேசும் அரசியல் கதையாக உருவாகி வருவதாக கூறப்படுகிறது. ஏற்கெனவே 'கத்தி' உள்ளிட்ட சில படங்களில் விவசாயிகள் பிரச்சனைகள் குறித்த காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், விஜய் தற்பொழுது அரசியல் கட்சி தொடங்கியுள்ளதால், இந்த படத்தில் விவசாய பிரச்சினையை கொஞ்சம் அழுத்தமாகவே வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.



## சசிகுமாரின் 'விடுதலை'

வெற்றிமாறன் இயக்கத்தில் உருவான 'விடுதலை' திரைப்படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில், அதே பெயரில் ஆனால் ஆங்கிலத்தில் Freedom என்ற பெயரில் சசிகுமார் நடித்த படத்தின் வீடியோ வெளியாகி வைரலாகி வருகிறது.

சசிகுமார் நடித்த 'நந்தன்' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி அடைந்த நிலையில், தற்போது அவர் Freedom என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் நாயகியாக லிஜோமோல் ஜோஸ் நடிக்கிறார்.

'கழுகு', 'சவாலே சமாளி', '1945' போன்ற படங்களை இயக்கிய சத்யசிவா இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.

சசிகுமார் பிறந்த நாளில் இந்த படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியாகி, இணையத்தில் வைரலாகியுள்ளது.

இந்த படத்தின் கதை, தவறே செய்யாமல் சிறையில் அகதியாக சிக்கிக்கொண்ட இருவர் எப்படி தப்பிக்கின்றனர் என கூறப்படுகிறது.



### தவறான நிர்வாகத்தால் வெறுப்படைந்த மக்கள்

# அனுரகுமார திசாநாயக்கவை தெரிவு செய்தனர்

– லத்தீப் பாரூக்

**1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து நாட்டிற்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த சேதத்தை உணராமல், அதிகாரத்தைப் பெறுவதையோ அல்லது தக்கவைத்துக் கொள்வதையோ நோக்கமாகக் கொண்ட குறுகிய நோக்கு மற்றும் அழிவுகரமான இனவெறி அரசியல், என்பனவற்றால் வெறுப்டைந்த இந்த நாட்டு மக்கள் 2024 செப்டெம்பர் 21 சனிக்கிழமையன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மார்க்சிஸ்ட் தேசிய மக்கள் கட்சியின் (என்.பி.பி.) தலைவர் அனுரகுமார திசாநாயக்கவை ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளனர். மக்கள் வழங்கியுள்ள செய்தி மிகத் தெளிவானது. அரசியலைச் சுத்தப்படுத்துங்கள், நாட்டைக் கொள்ளையடித்தவர்களைச் சட்டத்தின் முன்கொண்டு வந்து நிறுத்துங்கள், பிளவுபட்ட சமூகங்களை ஒன்றிணைத்து, அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை நோக்கி முன்னேறுங்கள். இது தான் மக்கள் வழங்கியுள்ள மிகத்திவான செய்தி**

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து 1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்த பிரச்சினை தொடங்கியது, அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக முன்னேறத் தேவையான அனைத்து வளங்களாலும் இந்த நாடு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீவு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஸ்திரத்தன்மையைக் கொண்டிருந்தது, கல்வியறிவு பெற்ற மக்கள் இருந்தனர், சகல மட்டங்களிலும் நேர்மை மற்றும் ஒருமைப்பாடு காணப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக எல்லா பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் நல்லிணக்கத்தை கொண்டிருந்தனர்.

அப்போது தேவைப்பட்டது என்னவென்றால், சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் மட்டுமே, அவர் சகல சமூகங்களையும் ஒன்றிணைத்து, நாட்டில் உள்ள எல்லா சமூகங்களினதும் முன்னேற்றத்துக்காக ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்கி இலங்கை மக்களைக் கூட்டாக முன்னேற்றப் பாதையில் வழி நடத்தக் கூடியவராக இருக்கவேண்டும் என்ற தேவை மட்டுமே இருந்தது.

துரதிருஷ்டவசமாக இனவெறி மனநிலை அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது, புதிய இலங்கை அரசாங்கம் செய்த முதல் தவறுகளில் ஒன்று, ஒரு புதிய குடியுரிமைச் சட்டத்தின் கீழ், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களின் குடியுரிமையை இரத்துச் செய்ததாகும்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள வணிக சமூகங்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த, நாட்டுக்கு அதிக வருவாயைக் கொண்டு வந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வர்த்தன சமூகம் தீவை விட்டு வெளியேறி மற்ற நாடுகளில் தங்கள் வர்த்தகங்களை நிறுவினர், அதே நேரத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குடியுரிமை உரிமைகள் எதுவும் இல்லாமல் தோட்டங்களுக்குள் முடக்கப்பட்டனர்.

1956ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முழக்கமாகத் தனிச் சிங்கள சட்டத்தை அமுலாக்கினார்.

அவர் காலம் கடந்து தனது தவற்றை உணர்ந்து, தமிழ் சமஷ்டி கட்சித் தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

எவ்வாறாயினும், இனவெறி இந்த நாட்டின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது, சிறுபான்மையினரின் கோரிக்கைகள், முறையீடுகள் மற்றும் நியாயமான, சட்டப்பூர்வமான உரிமைகள் செவி மடுக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டன. அப்படி எதுவுமே இல்லாதது போன்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டது.

1970இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் புத்த மதத்தைப் பிரதான மதமாகப் பிரகடனம் செய்தது, இதன் காரணமாகத் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி உருவாக்கப் பட்டது. இது இருபெரும் முக்கிய சமூகங்களான சிங்கள மற்றும் தமிழர்களுக்கு இடையிலான பிளவுகளுக்கும் வழியமைத்தது.

எரியும் நெருப்புக்கு மேலும் எரிபொருள் சேர்ப்பது போல, அனைத்து அதிகாரங்களையும் தனது கைகளில் ஒருங்கிணைத்து கொடூரமான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஜே.ஆர்.ஜயவர்தன அறிமுகப்படுத்தினார்.

1983 ஜூலையில் தமிழ் பயங்கரவாதிகளால் யாழ்ப்பாணத்தில் சிங்கள படை வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக தெற்கின் சிங்கள மக்கள், அரசாங்க ஆதரவுடைய குண்டர்களின் துணையோடு தமிழர்களைக் கொல்லவும் அவர்களின் சொத்துக்களை எரிக்கவும் தொடங்கியபோது ஜே.ஆரின் அரசாங்கம் கண்மூடித்தனமாக அதை அனுமதித்தது

இதன் விளைவாக நீடித்த தமிழ்ப் போராளிகளின் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம், ஒரு காலத்தில் சொர்க்க புரி என்று அழைக்கப்பட்ட அமைதியான நாட்டை ஒரு கொலைக் களமாக மாற்றியது.

இதனால் இந்தியப் படைகள் மற்றும் ஆயுத விற்பனையாளர்கள் இங்கு நிலைகொண்டனர், உலகம் முழுவதிலும் உள்ள மரணத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் வியாபாரிகளுக்கு இங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இது இந்த நாட்டின் விலைமதிப்பற்ற வளங்களை வடிகட்டியது, பொருளாதார வளர்ச்சியைத் தாமதப்படுத்தியது மரணம் மற்றும் அழிவை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்குப் பாதை அமைத்தது.

எப்படியோ தமிழ்ப் போராளிகள் ஒருவாறு தோற்கடிக்கப்பட்டனர். ஆனால், அதன் பிறகும், பின்னர் வந்த ஆட்சியாளர்கள் கசப்பான அந்த கடந்த காலத்திலிருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்ரிபால சிறிசேன ஆகியோரின் ஆட்சியில் அரச ஆதரவுடன் செயற்பட்ட இனவெறி கொண்ட கூறுகள் நாட்டின் பலவேறு இடங்களிலும் சிதறி பரவலாக மற்ற சமூகங்களுடன் இணக்கமாக வாழ்ந்த நாட்டின் இரண்டாவது பெரிய சிறுபான்மையான முஸ்லிம்களுக்கு எதிராக தங்கள் இனவெறியைக் கக்கத் தொடங்கினர்.

ஒழுங்கமைக்கப்பட்ட அரசாங்க குண்டர்கள் முஸ்லிம்களை எல்லா இடங்களிலும் இலக்கு வைத்துத் தாக்கத் தொடங்கினர், அவர்களின் வீடுகளை வணிக வளாகங்களை, தொழில்துறை சொத்துகளை மற்றும் பள்ளிகளைத் தாக்கினர். பல அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்ட இந்த தாக்குதல்களின் பின்னணியில் அரசாங்கங்கள் இருந்திருக்கலாம் என்று பரவலாகச் சந்தேகிக்கப்பட்டது. இதில் வேதனை என்னவென்றால், பௌத்த பிக்குகள் இந்த தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கி செயற்பட்மை தான்.

இந்த நாட்டில் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கத்தின் ஆதரவுடனான இந்துத்துவா மற்றும் இஸ்ரேலியசக்திகளின் பிரசன்னம் அதிகரித்த நிலையில் முஸ்லிம்கள் மீதான இந்த தாக்குதல்களும் இடம்பெற்றன. இந்த சக்திகளின் முஸ்லிம்கள் மீதான விரோதமும், வன்முறையும் பொதுவாக எல்லோரும் அறிந்த ஒன்றே.

இந்த சூழ்நிலையில் தான், உயிர்த்த ஞாயிறன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்ட பக்தர்கள் கொல்லப்பட்டனர். மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.பொதுவாக முஸ்லிம் சமூகத்துக்கும் இந்த தாக்குதல்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், முஸ்லிம் சமூகம் மிகக் கடினமான அட்டூழியங்களுக்கு முகம் கொடுத்தது.

இஸ்லாம் மார்க்கம் சிதைக்கப்பட்டது மற்றும் முஸ்லிம்கள் எல்லோரும் வன்முறையாளர்களாகச் சித்திரிக்கப்பட்டனர். கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் இன்னும் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மற்றும் அவர்களின் தமது சமயத்தைக் கடைப்பிடிப்பதில் இன்னமும் சில கெடுபிடிகள் நடைமுறையில் உள்ளன. இந்த முஸ்லிம் எதிர்ப்பு அலையின் காரணமாகவே கோட்டபாய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், அவர் பொருளாதாரத்தை மோசமாகச் சீர்குலைத்தார். மக்கள் மீது மோசமான பொருளாதார நெருக்கடிகளையும் கொண்டு வந்ததால் ஏற்பட்ட மக்கள் எழுச்சியால் அவர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தொடர்ந்து, தமது மதிப்பை இழந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களின் அடுத்த ஜனாதிபதியாக ஏற்கெனவே மக்களால் தோற்கடிக்கப்பட்ட அரசியல்வாதியான ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றம் ஊடாக தேர்ந்தெடுத்தனர். அவர் மக்களுக்குப் பொருளாதார நிவாரணம் அளித்ததாகக் கூறினாலும், உணவு, மருந்துகள், மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளும் கட்டணங்களும் மிக அதிகமாகவே காணப்பட்டன. சாதாரண பொது மக்களுக்குத் தாங்க முடியாத கஷ்டங்கள் ஏற்பட்டன.

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நெருக்கடி நிலைக்கு வந்து, அது தொடர்ந்த போதும் கூட, அரசியல்வாதிகளின் ஊழலும், இலஞ்சமும் மோசடியும் நாட்டை சுரண்டும் செயற்பாடுகளும் முடிவுக்கு வரவில்லை. ஒவ்வொரு முனையிலும் அவை தொடர்ந்தன.

அரசியலில் அவை ஒரு தீராத நோயாகப் பரவின. மக்கள் இதனால் விரக்தியடைந்தனர். இனவாதமும் ஊழலும் தலைவிரித்தாடிய அரசியலால், மக்கள் விரக்தியின் விளிம்புக்கு வந்தனர். பொருளாதார சுபிட்சத்துக்கான தலைமைத்துவத்தை அவர்கள் தேடத் தொடங்கினர்.

அந்த தேடலின் வளைவு தான் இருண்ட ஓர் சூழ்நிலையில் மார்க்சிஸ்ட் வாத தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஊழல்வாதிகளைச் சட்டத்திற்கு முன் நிறுத்தி, சிதைந்து போன நாட்டை மீண்டும் கட்டி எழுப்ப ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தப் போவதாகுவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் எல்லோரையும் ஒன்றிணைத்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற அவரது அழைப்பு சிறுபான்மையினரின் காதுகளுக்கு ஒரு இனிமையான இசையாக அமைந்துள்ளது.

அதனால் தான் யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் ஜனாதிபதி அனுரகுமாராவின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன என்று நினைக்கிறேன்.

**இலங்கை மக்களைக் கூட்டாக முன்னேற்றப் பாதையில் வழி நடத்தக் கூடியவராக இருக்கவேண்டும் என்ற தேவை மட்டுமே இருந்தது**

**மக்கள் விரக்தியின் விளிம்புக்கு வந்தனர். பொருளாதார சுபிட்சத்துக்கான தலைமைத்துவத்தை அவர்கள் தேடத் தொடங்கினர்**

**இருண்ட ஓர் சூழ்நிலையில் அனுரகுமார திசாநாயக்க நாட்டின் 9ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்**



**“ ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றம் ஊடாக தேர்ந்தெடுத்தனர். அவர் மக்களுக்குப் பொருளாதார நிவாரணம் அளித்ததாகக் கூறினாலும், உணவு, மருந்துகள், மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளும் கட்டணங்களும் மிக அதிகமாகவே காணப்பட்டன. சாதாரண பொது மக்களுக்குத் தாங்க முடியாத கஷ்டங்கள் ஏற்பட்டன**



# “தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை”

சிறுவர்கள் உலகில் சஞ்சரிப்பது என்பது மிகவும் மகத்தானதொரு செயல். இந்தச் சிறுவர்களுக்கிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக சர்வதேச சிறுவர் தினம், 1954ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்றைய தினமான ஒக்டோபர், 1ஆம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. (முதியோர் தினமும் இன்றைய நாளிலேயே கொண்டாடப்படுகின்றது) எனினும், இச்சிறுவர்கள் தினமானது ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகிறது. உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உள்ள அடிப்படை உரிமைகள் இந்நாளில் நினைவுகூறப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

வளர்ந்த பெரியவர்கள் அனேகர் “நான் இன்னும் சிறு வயதுடையவராகவே இருந்திருக்கலாம்” என வாய்விட்டுக் கூறுகின்றனர். காரணம், சிறு வயதில் தாம் விட்ட தவறுகளைச் சரிப்படுத்த எண்ணுகின்றனர். காலம் திரும்பாது அல்லவா? எனவே, தற்போதுள்ள சிறுவர்களாகிய நீங்கள் உங்கள் சிறு வயதுக் காலத்தைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

**‘ஒப்புரவு ஒழுகு’**

என்கின்றது ஔவையாரின் ஆத்திசூடி. இதன் பொருள் யாதெனில், உலகத்தின் போக்கு எப்படி என்று அறிந்து, அதற்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும். உலகம் என்பது உங்களைச் சுற்றியிருக்கும் சமூகம். இச்சமூகம் நன்மையானதாகவும் இருக்கும். தீமையானதாகவும் இருக்கும். நன்மையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நல்லவற்றை உள்வாங்கி அதற்கு ஏற்றால்போல், ஒழுகுதல் வேண்டும். தீமையாக இருக்கும் போது, அதைவிட்டு விலகிச் செயற்படுதல் வேண்டும். இதுவே எதிர்கால சமூகத்தின் விழுதுகள் ஆகிய சிறார்களின் பொறுப்பாகும்.

சமூகமானது பல விதிமுறைகளை விதித்திருக்கின்றது. அவ்விதிமுறைகளை ஒழுகாததன் காரணமாக அதாவது கடைப்பிடிக்காமையினால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. சாதாரணமாக ஒரு சின்ன விடயமாக இருந்தாலும் அதற்கென்று இருக்கும் விதிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டும். சிறுபராயம் முதலே இவ்வாறான விதிமுறைகளை மிகச் சரியான முறையில் கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் பிரச்சினைகளே வராது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்று சொல்வார்களே.

> **அன்பாகப் பழகும்போது எம்மீதான மற்றவர்களின் மரியாதையும் அதிகரிக்கும் என்பதை சிறார்கள் ஆகிய நீங்கள் மனதில் நிறுத்துங்கள்**

சிறுபராயமானது அநாவசியமான எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாத வயது. ஆகவே, இவ்வயதில் நல்லவற்றை விதைப்போம். இந்த விதை ஆலமரமாகும் போது, சமூகத்துக்கு நிழல் எனும் சுகத்தை உண்டாக்கும்.

சமூகத்தின் விதிமுறை எனும் போது, தொழிலை சரியான முறையில் மேற்கொள்ளுதல், அன்பு, பண்பு, தீயதை தீண்டாது இருந்தல், சட்டங்களை மதித்தல் மற்றும் விதிகளை மீறாது இருத்தல் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுவர்களது தொழில் கல்வி கற்பது, இக்கல்வியை சிறுவயது முதற்கொண்டு சரியான முறையில் உள்வாங்கிக் கற்க வேண்டும். கற்றது மாத்திரமல்லாது, கற்ற கல்வியின் படி நடத்தல் வேண்டும்.

சிறு வயது முதல் அனைவரிடமும் அன்பாகப் பழகும்போது எம்மீதான மற்றவர்களின் மரியாதையும் அதிகரிக்கும் என்பதை சிறார்கள் ஆகிய நீங்கள் மனதில் நிறுத்துங்கள். அன்பு செலுத்துவது மாத்திரமல்ல விதிமுறைகளையும் சரியாகக் கடைப்பிடிக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

பெரியோர்களைவிட சிறார்களாகி நீங்கள் அவதானித்திருப்பீர்கள் இன்றளவில் விபத்துக்கள் எவ்வளவு அதிகரித்துள்ளன? நொடிக்குப் பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறு விபத்துக்கள் ஏன் அதிகரித்துள்ளன என உங்கள் சின்னஞ்சிறு சிந்தனைகளைப் பரப்பிப்பாருங்கள்.

மிகச் சிறிய விடயம்தான். அதற்கென்று இருக்கும் விதியை சரியான முறையில் கடைப்பிடிக்கவில்லை. அதாவது, வீதி ஒழுங்கைப் பேணவில்லை.

சிறுவயது முதல் இந்த வீதி ஒழுங்குகளை நீங்கள் சரியாகக் கடைப்பிடியுங்கள். உங்கள் மூலமாகப் பெரியவர்களைத் திருத்துங்கள், தவறில்லை. (மேற் குறிப்பிட்டிருந்த நன்னெறிக் கதையில் மலைப்பாதையில் ஏற சிரமப்பட்ட பெரியவரை, சிறுமி திருத்தியது போன்று) சட்டங்களை மதித்து நடந்துகொள்ளுங்கள். பாதசாரிக் கடவையில்தான் வீதியைக் கடக்க வேண்டும் என்பது அதற்கென வகுக்கப்பட்ட விதிமுறை. அப்படியிருக்கும் போது பாதசாரிக் கடவையில் மட்டும் வீதியைக் கடவுங்கள். இது சின்ன விடயம் தானே என ஒதுக்கி விடாதீர்கள்.

எனவே, சின்னச் சின்ன விடயமாக இருந்தாலும், எதிலும் பிழை விடாதீர்கள். இவ்வாறான சின்னச் சின்ன விடயங்களில் விடும் பிழைகள் தான் சமூகத்தில் தற்போது தலைதூக்க முடியாத பல்வேறு குற்றச் செயல்களுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

இன்று, சிறுவர் துஷ்பிரயோகம் சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றது. சிறார்களாகிய உங்களை அடித்தல், தீயால் சுடுதல், நஞ்சூட்டல், மூச்சுத்திணறலை ஏற்படுத்தல், புறக்கணித்தல், உணர்ச்சியை மதிக்காமை, சமூக தொடர்பைத் துண்டித்தல், அச்சுறுத்தல், பாலியல் உறவுக்கான தூண்டுதல் மற்றும் வற்புறுத்தல் என்பன சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஆகும். இந்த தீமைகளிலிருந்தும் உங்களை நீங்கள் பாதுகாக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாது, உங்கள் வயது சிறார்களையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

ஏனெனில், எதிர்காலத்தை மாற்றியமைக்கப்போவது நீங்களே. ஆகவே, மனதாலும் உடலாலும் வலுவானவர்களாகத் திகழுங்கள். மனதால் வலுவானவர்களாகத் திகழ சூரியன் உதிப்பதற்கு முன்னரே நீங்கள் எழுந்திருங்கள். தியானம், மூச்சுப்பயிற்சி மற்றும் யோகாசனத்தால் மனதை ஒருநிலைப்படுத்துவது போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைளை முன்னெடுங்கள்.

சரியான ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களைக் கடைப்பித்து உங்கள் சின்னஞ்சிறு உடலைப் பாதுகாத்துக்கொள்வதுடன் வலிமையானதாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் தற்போதுள்ள கொடிய சமூகத்திடமிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

எனவே, இன்று முதலே சிறுவர்களாகிய நீங்கள் நல்லவற்றை இனங்கண்டு அவற்றை உள்வாங்கி, ஒரு நல்ல பிரஜையாக வாழுங்கள். இவ்வாறு இருக்கும் போது பெரியவர்களுக்கு முன்மாதிரியாக மட்டுமல்லாது எதிர்கால சமூகத்துக்கும் பாதுகாப்பு நிறைந்த வலுவான அத்திபாரமாகுங்கள்.



## நிந்தவூர் வெளவாலோடை

# தூர்ந்து தேய்கிறது



ஹம்தா லதீப்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஆசியாவிலேயே அதிக உயிர் வளங்களைக் கொண்ட நாடாக இலங்கை தனித்துவமாக விளங்குவதற்கு உயிர் பல்வகைமைகளைக் கொண்ட இடங்களான ஆற்றுப்படுக்கைகள், நீரோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களுக்கு அளப்பரிய பங்கு உண்டு. அவை சூழலின் சமநிலையைப் பேணுவதற்கு ஆதாரமாக காணப்படுகின்றன. ஆனால், இன்று அனேகமான நீரோடைகள் அதன் முக்கியத்துவத்தையும் பண்புகளையும் இழக்க நேரிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நிந்தவூர் 9ஆம் பிரிவில் காணப்படும் வெளவாலோடை வருடத்தில் சில காலம் கடலுடன் கலக்கும் நீரை கொண்ட ஓடையாகும். இதன் காரணமாக நன்னீருக்கும் உவர்நீருக்கும் இடைப்பட்ட இடைமாறத்தக்க உயிரியல் பல்வகைமை முக்கியத்துவம் வாய்ந்த உணர்திறன்மிக்க சூழல் தொகுதியாக கடந்த காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு கரையில் அரச நிறுவனங்களினதும் இன்னொரு கரையில் தனியாரினதும் மிகக் கடுமையான நில ஆக்கிரமிப்பு அழுத்தம் காரணமாக அதன் நீர் சூழற்றொகுதியின் பரப்பு குறைக்கப்பட்டு மிகவும் சொற்பமான சூழல் முக்கியத்துவம் வாய்ந்த தாவர, உயிரினங்களே இன்று காணப்படுகின்றன.



றைசோபோறா (பெருங்கண்டல்), சொனறேசியா (கிண்ணை), டோலிகான்ட்ரன் (வில்பத்திரி), லுமினிற்சரா (தீப்பரத்தை), கலோபிலம் (புண்ணை), டெறிஸ் (தில்லங்கொடி), ஹிபிஸ்கஸ் (நீர்பருத்தி), தெஸபீசியா (பூவரசு), பென்டானஸ் (தாழை), கிளறோடென்ட்றம் (பிச்சுவிளாத்தி), பிறம்னா (பீஞ்சல்), தைபா (சாப்பைப்பண்) போன்ற அடிப்படையானதும் துணையானதுமான பல கண்டல் இனங்கள் காணப்படுகின்றன. நிலம் பிடித்தல் காரணமாக மிக மிக சிறியதாக சுருங்கிக் கொண்ட கடற்கரையின் நெய்தல் வளையத்தில் அடம்பன், ராவணமீசை போன்ற தாவரங்கள் எஞ்சி காணப்படுகின்றன. அத்துடன் ஆற்றுவாழை, ஆகாயத்தாமரை, சல்வேனியா, கள்ளி மற்றும் நாயுண்ணி போன்ற அந்நிய ஆக்கிரமிப்பு தாவரங்களும் காணப்படுதல் இந்த சூழல் தொகுதியின் சூழலியல் முக்கியத்துவத்தை இன்னும் அதிகரிக்கின்றது.

வயல் நிலங்களின் மேலதிக நீர் வடிவதற்கும், வெள்ள காலத்தில் வெள்ள நீர் வடிவதற்கும், சுனாமி போன்ற அனர்த்த காலங்களில் சுனாமி அலைகளின் தாக்கத்தை குறைப்பதற்கும், நீர் சேகரிப்பிற்கும், நீர் முகாமைத்துவத்திற்கும் இந்த வெளவாலோடை மிக முக்கிய பங்காற்றுகின்றது. சூழலுக்கு பாரிய பங்குகளை வழங்கக்கூடிய கண்டல் இன தாவரங்களை அதிகமாக கொண்டிருப்பதினால் கடல் அரிப்பிற்கு எதிராக இயற்கையும் பாதுகாக்கின்றது. இத்தகைய உயிர் பல்வகைமைகளைக் கொண்ட இந்நீரோடை மனித நடத்தைகளினால் தனது பண்புகளை இழக்கவும் நேரிடுகின்றது.

சூழல் தொகுதிகளை பாதுகாப்பது தொடர்பில் பல்லுயிர் பாதுகாப்பு நிபுணர் கலாநிதி சமந்தா பெரேரா “இலங்கையின் பல்லுயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் ஆகும். இந்த தனித்துவமான உயிரினங்களின் உயிர் வாழ்வை உறுதிப்படுத்துவதும் எதிர்கால சந்ததியினருக்கு இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதும் எங்கள் பகிரப்பட்ட பொறுப்பு” என்று குறிப்பிட்டுள்ளார்.

சூழல் தொகுதிகளை பாதுகாப்பதற்கு, பல்லுயிர் பெருக்கத்தின் மதிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வனவிலங்குகள் மற்றும் இயற்கை வாழிடங்களுக்கு பொறுப்பான நடத்தையை ஊக்குவித்தல், விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் பிற தொழில்களின் நிலையான நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை நன்கு புரிந்து கொள்ளவும் பாதுகாக்கவும் ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு திட்டங்களை ஆதரித்தல் போன்றன சில பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஒரு உள்ளூர் வளத்தின் பெறுமதியை பாதுகாப்பது அந்த உள்ளூர் மக்களுடைய பொறுப்பாகும். அந்தவகையில், இதற்கான நடவடிக்கைகளை உள்ளூர் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் ஆரம்பிக்கலாம். அவர்களை உள்ளூர் வளங்களை அறிவதற்காக களப்பயணங்களை மேற்கொண்டு இவ்வாறான இடங்கள் பற்றியும் அவற்றின் மகிமை மற்றும் பாதுகாப்பதே பற்றியும் அறிவுறுத்துவது சிறந்தது.



பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில், அறிவித்தல் பலகைகளை அமைப்பதன் மூலமும், அங்குள்ள தாவர வளங்களை பற்றிய மேலதிக விபரங்களை அதில் சேர்ப்பதன் மூலமும், குறைந்தபட்சம் வளங்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். நீர்ச்சூழலின் சமநிலையை பேணுவதில் நிந்தவூரின் வெளவாலோடை அளப்பரிய பங்கினை வழங்கும் வளமாகும். அதன் மீதான ஆக்கிரமிப்புக்களையும் அத்துமீறல்களையும் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்போடு அரசும் இணைந்து செயல்படுவதன் மூலம் எதிர்காலத்திற்கு இவ்வாறான தாவரப் பல்வகைமையை பேணக்கூடியதாகவும் இருக்கும்.

கத்மண்டு

நேபாளத்தில் கடும் மழை

# 170 பேர் பலி

நேபாளத்தில் பெய்த கடும்மழை வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 170ஐ தாண்டியுள்ளது.

நேபாளத்தில் கடந்த சில தினங்களாக கடும்மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை(28) மட்டும் நேபாளத்தின் பல பகுதிகளில் 20 முதல் 30 செ.மீ. மழை பெய்துள்ளது.

இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கி கிடக்கின்றன. மேலும் பல இடங்களில் வெள்ள நீர் காரணமாக மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இதற்கிடையே, கிழக்கு மற்றும் மத்திய நேபாளத்தின் பல இடங்கள் வெள்ளத்தில் தத்தளிப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி போயுள்ளது. பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் தேசிய நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.



மேலும், கடும்மழை நீடிப்பதால் கத்மண்டுவில் ஓடும் பாக்ரி நதியில் அபாய அளவை தாண்டி நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி தலைநகர் கத்மண்டுவில் 48 பேர் பலியாகினர்.

இந்நிலையில், நேபாளத்தில் இதுவரை கடும்மழை வெள்ளம், மண்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 170ஆக உயர்ந்துள்ளது.

42 பேர் மாயமாகியுள்ளனர். 111 பேர் காயமடைந்துள்ளனர்.

டோக்கியோ



# சம்பாத்தியம் தரும் மயான சாம்பல்

ஜப்பானில் இறந்தவர்களின் சாம்பலில் உள்ள உலோகங்களை விற்பனை செய்து377 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளனர்.

ஜப்பானில் வருடம் தோறும் சராசரியாக 15 இலட்சம் பேரின் சடலங்கள் எரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அங்குள்ள மக்கள் தங்களின் பற்களை அடைக்க தங்கம், பிளட்டினம் உள்ளிட்ட உலோகங்களை பயன்படுத்துகின்றனர்.

இதனால் அங்கு வசிக்கும் மக்கள் உயிரிழந்த பிறகு, எரிக்கப்படும் சாம்பல்களில் உலோகங்கள் அதிகம் இருக்கின்றன. எனவே அதனை விற்று பல்வேறு ஜப்பானிய நகரங்கள் பணம் சம்பாதிக்கின்றன. ஜப்பானில் 97% மயானங்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இதன் மூலம் அரசு அதிக இலாபம் சம்பாதிக்கின்றன. கடந்த 2023 மட்டும், இறந்தவர்களின் சாம்பலில் உள்ள உலோகங்களை விற்பனை செய்து ரூ.377 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, கியோடா நகரம், யோகோஹாமா நகரம், நகோயா நகரம் அதிகம் இலாபம் சம்பாதிப்பதாக, அரசு தெரிவித்த தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

சிரியாவில் குண்டுவீச்சு

# கிளர்ச்சியாளர்கள் 37 பேர் பலி



சிரியாவில் அமெரிக்க இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில், களர்ச்சியாளர்கள் 37 பேர் கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களில் பலர், அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கு எதிராக செயல்படுகின்றனர். அவர்களை ஒழிக்க இரு நாட்டு இராணுவத்தினரும் அவ்வப்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சிரியாவில் அமெரிக்க இராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘அல் கொய்தா அமைப்புடன் தொடர்புடைய ஹீராஸ் அல்-தீன் குழுவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 9 பேரை குறிவைத்து வடமேற்கு சிரியாவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 9 பேரும் கொல்லப்பட்டனர்.

மத்திய சிரியாவில் ஐ.எஸ். பயிற்சி முகாம் மீது வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 28 ஐ.எஸ். அமைப்பினர் கொல்லப்பட்டனர். அமெரிக்காவுக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்தினால், வான்வழி தாக்குதல் வாயிலாக பதிலடி கொடுப்போம்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

த.வெ.க. கொடியின் சின்னம் குறித்து

# தேர்தல் ஆணையம் பதில்

தமிழக வெற்றிக் கழக கொடியில் யானைச் சின்னம் இடம்பெற்ற விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிடாது என பகுஜன் சமாஜ் கட்சி புகாருக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியை துவக்கியுள்ள விஜய், 2026 சட்டசபை தேர்தலில் களமிறங்க உள்ளார். அதற்கு முன், கட்சியின் பெயர் மற்றும் கொடியை, மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், தேசிய கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான




யானை படத்தை த.வெ.க. கொடியில் பயன்படுத்துவது தேர்தல் விதியின்படி தவறானது என்றும், உடனடியாக அப்படத்தை நீக்க வேண்டும் என அக்கட்சி, தேர்தல் ஆணையம் புகார் அளித்தது.

இது குறித்து, தேர்தல் ஆணையம் திங்கட்கிழமை (30) வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழக வெற்றிக் கழக கொடி விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிடாது. ஒரு கட்சியின் கொடிக்கு நாங்கள் ஒப்புதல், அங்கீகாரம் வழங்குவது இல்லை. அரசியல் கட்சிக் கொடியில் இடம்பெறும் சின்னங்களுக்கு ஆணையம் ஒப்புதலோ, அங்கீகாரமோ வழங்காது. தேர்தல் நேரத்தில் அவர்கள் கட்சியின் சின்னமாக யானையை பயன்படுத்த முடியாது. த.வெ.க. கொடிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை” என்று தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது.

ஐதராபாத்

# மகளின் திருமணத்திற்கு தங்க சேலை

தெலுங்கானாவில் முழுக்க முழுக்க தங்கத்தில் நெசவு செய்யப்பட்ட சேலையொன்று, வாடிக்கையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

ஐதராபாத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவரின் மகளின் திருமணத்திற்காக, பிரத்தியேகமாக தங்கத்தினால் இந்த சேலை வடிவமைக்கப்பட்டுள்ளது. சிர்சில்லாவைச் சேர்ந்த விஜயகுமார் என்ற நெசவாளரே இதனை தயாரித்துள்ளார்.

மிகவும் நுணுக்கமாகவும், கலைநயத்துடனும் செய்யப்பட்ட இந்த தங்க சேலை, 49 இன்ச் அகலமும், 5.5 மீட்டர் நீளமும் கொண்டதாகும். 800 முதல் 900 கிராம் எடை கொண்ட இந்த சேலையில், 200 கிராம் சுத்தத் தங்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் மதிப்பு இந்திய ரூபாவில் சுமார் ரூ.18 இலட்சம் இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக நெசவாளர் விஜயகுமார் கூறுகையில், ‘தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தங்கத்தை நூல் போன்ற வடிவமைப்புக்கு மாற்றி, 10 முதல் 12 நாட்களில் சேலை தயார் செய்யப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் இந்தியா

பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இந்தியா முன்னிலையில் காணப்படுகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியா வென்ற நிலையில், கான்பூரில் வெள்ளிக்கிழமை(27) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பங்களாதேஷ், மொமினுல் ஹக்கின் ஆட்டமிழக்காத 107 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 3, ஆகாஷ் டீப் 2, இரவிச்சந்திரன் அஷ்வின் 2, மொஹமட் சிராஜ் 2, இரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, யஷஸ்வி ஜைஸ்வாலின் 72, லோகேஷ் ராகுலின் 68, விராட் கோலியின் 47, ஷுப்மன் கில்லின் 39 ஓட்டங்களோடு 9 விக்கெட்டுகளை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், மெஹிடி ஹஸன் மிராஸ் 4, ஷகிப் அல் ஹஸன் 4, ஹஸன் மஹ்மூட் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ், நேற்றைய நான்காம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் அஷ்வின் வீழ்த்தினார்.




இரண்டாவது போட்டியில்

# தென்னாபிரிக்காவை வென்ற அயர்லாந்து

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் அயர்லாந்து வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்றிருந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற மேற்படி போட்டியில் அயர்லாந்து வென்றதன் மூலம் தொடர் 1-1 என சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

அயர்லாந்து: 195/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொஸ் அடைர் 100 (58), போல் ஸ்டேர்லிங்க் 52 (31), ஜோர்ட் டொக்ரல் ஆ.இ 20 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுங்கி என்கிடி 1/23 [4], பற்றிக் குரூகர் 1/31 [4], லிஸாட் வில்லியம்ஸ் 1/35 [4])

தென்னாபிரிக்கா: 185/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றீஸா ஹென்ட்றிக்ஸ் 51 (32), மத்தியூ பிறீட்ஸ்கே 51 (41), றயான் றிகெல்டன் 36 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 4/31 [4], கிரஹாம் ஹுமெ 3/25 [4], மத்தியூ ஹம்பிறீஸ் 1/30 [4])



கிளிநொச்சியில் புறக்கணிக்கப்பட்ட வீரன்

# தேசிய ரீதியில் பிரகாசிப்பு

மு.தமிழ்ச்செல்வன்




தேசிய ரீதியில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை பிரதிநிதிபடுத்தும் போட்டியில் கிளிநொச்சி மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக வீரனும், பல்கலைக்கழக மாணவனுமாகிய நாகராசா நிசாந்தன் பங்குபற்றிய அணி இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளது.

குழுநிலைப் போட்டிகளில்ல் மூன்று அணிகளை வீழ்த்தி குழு நிலையில், முதல் நிலை பெற்று, காலிறுதிப் போட்டியில் வயம்ப பல்கலைக்கழகத்தையும் அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தையும் வீழ்த்தி, இறுதி போட்டியில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திடம் 1-1 என்ற செட் கணக்கில் சமநிலையில் வந்து இறுதி செட்டில் 14-13 என்ற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைந்து நிசாந்தன் பங்குபற்றிய அணி இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டது.

நிசாந்தன் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழக கடற்கரை கரப்பந்தாட்ட அணி கரைச்சி பிரதேச செயலக பிரிவு, கிளிநொச்சி மாவட்டம், வடக்கு மாகாண மட்டங்களில் போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டி இவ்வாண்டு ஜூன் மாதம் நீர்கொழும்பில் இடம்பெற்ற தேசிய போட்டிக்கு செல்லவிருந்த நிலையில், மாவட்ட மட்டத்தில் உரிய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படவில்லை. எனவே, ஏன் தேசிய போட்டிக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சிலரிடம் வினவிய போது, நீர்கொழும்பில் மூன்று நாள்கள் தங்கியிருக்க வேண்டும்.

ஒரு நாள் தங்குமிட செலவு 8,500 ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால், குறித்த நிதி வசதி ஏற்பாடு செய்து தரப்படவில்லை. இதன் காரணமாக தேசிய போட்டிக்கு வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு வீரர்களை அழைத்துச் செல்லமுடியாது போய்விட்டது என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இங்கிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளை அவுஸ்திரேலியாவுன், அடுத்த இரண்டு போட்டிகளையும் இங்கிலாந்து வென்ற நிலையில் பிறிஸ்டலில் ஞாயிற்றுக்கிழமை(29) நடைபெற்ற ஐந்தாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றமையையடுத்தே 3-2 என்ற ரீதியில் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.




இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பென் டக்கெட்டின் 107 (91), அணித்தலைவர் ஹரி ப்றூக்கின் 72 (52), பில் ஸோல்டின் 45 (27), அடில் ரஷீட்டின் 36 (35) ஓட்டங்களோடு ஆரோன் ஹார்டி (2), அடம் ஸாம்பா (2), கிளென் மக்ஸ்வெல், ட்ரெவிஸ் ஹெட்டிடம் (4) விக்கெட்டுகளை இழந்து 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் 309 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 310 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, 20.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்ட நிலையில் டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ண் முறையில் அப்போது 117 ஓட்டங்களை பெற்றிருக்க வேண்டிய அவுஸ்திரேலியா 49 ஓட்டங்களால் வென்றது. துடுப்பாட்டத்தில் மத்தியூ ஷோர்ட் 58 (30), அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 36 (48), ஹெட் 31 (26), ஜொஷ் இங்லிஸ் ஆட்டமிழக்காமல் 28 (20) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மத்தியூ பொட்ஸ், பிறைடன் கார்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் ஹெட் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 01, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.